
# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி

ஏப்ரல் 2009




சமய - சமூக - இலக்கிய வெளியீடு

20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஏப்ரல் - 2009

மலர்- 41 இதழ்- 03


**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**

நிரோன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| உயிர்ப்பு விழா | - | 02 |
| யூதர்களின் கலை... | - | 06 |
| ஈழத்தை அளந்த புனிதன் | - | 09 |
| மாணவர் பக்கம் | - | 11 |
| காற்றில் சூறைபோன... | - | 12 |
| உயிர்ப்பு எப்போது? | - | 16 |
| கடுகுக்கதை | - | 17 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 18 |
| உணர்வு தரும்... | - | 20 |
| வாய் திறந்த கல்லறை | - | 21 |
| இலக்கிய மஞ்சரி | - | 23 |
| விடைகள்,போட்டி முடிவுகள் 73 | - | 26 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P. O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

E.mail: scctribatti@gmail.com



விலை : *20/=*

ஆண்டு சந்தா : *350/=*

(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோரின் விழாக்களிலே தலைசிறந்த, மகத்தான விழா கிறிஸ்து இயேசுவின் **உயிர்ப்பு விழாவேயாகும்.** கிறிஸ்து உயிர்த்துவிட்டார்; இன்றும் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார்; எம் கஷ்ட நஷ்டங்களிலே பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார். மனிதனின் சாதாரண நாளாந்த வாழ்வில் ஏற்படும் துன்பவியல் நிகழ்வுகளுக்கு இயேசுவின் பாடுகள் மரணம் தெளிவான அர்த்தத்தைக் கற்றுத் தருகின்றது. ஆதலால் துன்பத்தைக் கண்டு துவண்டுவிட முடியாது. ஓடி ஒளித்துவிடவும் முடியாது. வாழ்வின் யதார்த்தத் தன்மைகளுக்கு இயேசுவின் வரலாற்றுச் சம்பவங்கள் தடம்பதித்து நிற்கின்றன.

**இதோ மனிதன்** என பிலாத்து கசையடித் தண்டனை கொடுத்து சூழ்ந்து நின்ற அதிகாரக் கூட்டத்தினருக்குச் சுட்டிக்காட்டினான். ஆனால், இந்தச் சாதாரண மனிதர் அசாதாரணக் காரியங்களைச் சற்றும் தயக்கமின்றி நிகழ்த்திக் காட்டினார். **இது எதற்காக** என்று நோக்கும்போது "தந்தையே நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவி சாய்க்கிறீர் என்பது தெரியும். எனினும் நீரே என்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும் பொருட்டே இப்படிச் சொன்னேன்" (யோவான் 11:41,42) இவ்வாறு செபித்து தான் வெறும் மனிதனல்ல, மாறாக இறைமனிதன், எம்மை மீட்க வந்த மெசியா, இரட்சகர் என்பதை நிரூபித்தார்.

**இவர்களை மன்னியும்** என்னும் மாபெரும் மன்னிப்பை இந்த உலகத்தார் அனைவரும் பெற்றுக் கொள்ளச் சிலுவையிலே இன்னுயிரை ஈந்த அந்தக் கொடூரமான மரண வேளையிலும் தந்தையைப் பார்த்து செபித்தார் இயேசு. "தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34) இப்படியாக அவர் சிலுவையிலே அறையப்பட்டு மரித்ததன் வழியாக தந்தையாகிய கடவுளுக்கும் பாவிகளாகிய மனிதருக்கும் இடையே மீண்டும் பாசத்தை, நேசத்தை, புரிந்துணர்வை, தொடர்பை ஏற்படுத்தி வைத்தார்.


**போ, இனிமேல் பாவம் செய்யாதே** என்று அன்றைய நாளில் கொடுத்த தீர்ப்பு இன்றும் மனம் மாறி நற்செய்தியை நம்பி மீட்பைப் பெற்றுக்கொள்ள எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும் வாரி அணைத்து மறுவாழ்வு கொடுக்கின்றார் இயேசு.

**யாரைத் தேடி வந்தீர்கள்** என்று வினவி "நீங்கள் என்னைத் தேடுகின்றீர்கள் என்றால் இவர்களைப் போக விடுங்கள்" (யோவான் 18:86) என உரைத்ததன் மூலம் தன் துன்பக் கிண்ணத்தைத் தானே பருகவேண்டும் என்பதிலே குறியாய் இருந்தார். **இது எதற்காக** என்று நாம் வினவினால் வாக்களிக்கப்பட்ட **இரட்சணியம்** (மீட்புத் திட்டம்) நிறைவேற வேண்டும் என்பதற்காகவே.

எனவே, எமது வாழ்வில் **சிலுவைப் பாதை அன்றும் இன்றும்** என்பதாக இயேசு பிரானின் சிலுவைப் பயணத்தைத் தியானித்து இன்று எவ்வாறு சிலுவை சுமப்புகளும், விழுகைகளும் உள்ளன என உணர்ந்து, வீழ்ந்து கிடக்கின்ற மனிதர்களாக அல்லாமலும் விரக்தியால் தற்கொலை மரணத்தைத் தழுவிக் கொள்ளும் மனிதர்களாகத் தோற்றுப் போகாமலும் மாறாக எழுந்துவிட்டவர்களாகவும் உயிர் பெற்றவர்களாகவும் வாழ்ந்து சாதித்துக் காட்டுவதன் வழியாகவே உண்மைக் கிறிஸ்தவர்களென மார்புதட்டிக் கொள்ளலாம்.

**வாரீர் அல்லேலூயா பாடிக்கொண்டு இயேசு**வின் உயிர்ப்புக்கு சாட்சி பகர்வோம்.

**- ஆசிரியர்**



## இறைவாக்கு

**"உயிரோடிருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை, அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்"**

(லூக்கா: 24:5b,6a)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# உயிர்ப்பு விழா

பேரருள்தந்தை. கலாநிதி. பொன்னையா
யோசப் ஆண்டகை

கடும் வரட்சிக்குப்பின் பெய்யும் மழையைக் கண்டு மகிழ்வது போலவும், கொடிய குளிர் காலத்துக்குப்பின் வரும் வசந்த காலத்தைக் கண்டு மகிழ்வது போலவும் 40 நாட்கள் தவக்காலத்தை முடித்துக் கொண்டு உயிர்ப்பு விழா மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கின்றோம்.

### இரட்டிப்பு மகிழ்ச்சி

நமது மகிழ்ச்சி இரட்டிப்பாவதற்குக் காரணம் பெரிய வெள்ளியன்று மனுமகனின் பாடுகளையும் இறப்பையும் நினைவுகூர்ந்து உண்மையை பொய்மை தோற்கடித்து விட்டது, நீதியை அநீதி வென்று விட்டது, அதர்மம் நிலைத்து விட்டது என ஆழ்ந்த துயரத்திலிருந்த எம்மை 'ஆண்டவர் உயிர்த்து விட்டார், மரணத்தை வென்று விட்டார்' என்ற செய்திதான். இது எம்மை ஆனந்தத்தில் ஆழ்த்தாமல் இருக்க முடியுமா? ஆம், திருப்பாடல் ஆசிரியரோடு சேர்ந்து 'ஆண்டவர் ஏற்படுத்திய நாள் இதுவே. அக்களிப்போம் இன்று அகமகிழ்வோம்'(திபா 118:24) என ஆடிப்பாடி மகிழ்வது பொருத்தமானது. ஏனெனில் எமது சோகம் மகிழ்ச்சியாக மாறி விட்டது. எமது நம்பிக்கைக்கு ஆதாரம் கிடைத்து விட்டது.

இயேசு கசையால் அடிக்கப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டு போர்வீரர்களால் எள்ளி நகையாடப்பட்டு பாரமான சிலுவை சுமந்து சென்று சிலுவையில் இரு கள்வர் நடுவில் தொங்கவிடப்பட்டு மும்மணிநேரம் தொங்கி உயிர்நீத்து அடக்கம்பண்ணப்பட்டபோது அவரது கதை முடிந்திருந்தால் அது சோகக்கதையாக இருந்திருக்கும். நாமும் ஏமாற்றம் அடைந்திருப்போம்.

மாறாக, அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; மரணத்தை வென்றார். கல்லறைக்குள் அவரை அடைத்து வைக்க முடியவில்லை. வரலாற்றை மாற்றியவர் அவரே. உயிர்ப்பின் முதற்கனி அவரே. அவருக்கு முன்னர் யாரும் உயிர்த்தெழுந்ததாக வரலாறு இல்லை. அவர் மூவரை உயிர்ப்பித்த வரலாறு உண்டு. ஆனால் அது உயிர்த்தெழுதல் அல்ல. வெறும் உயிர்ப்பித்தல்தான். ஏனெனில் அவர்கள் மீண்டும் இறந்தார்கள். கிறிஸ்துவோ மீண்டும் இறக்கவில்லை. அவர் என்றென்றும் உயிர் வாழ்கிறார்.

### மரணபயம்

இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் இறக்க வேண்டும் என்பது இயற்கையின் நியதி. ஆனால் மனிதனோ இறக்கப் பயப்படுகின்றான். பாவத்தின் விளைவுதான் மரண பயம். கிறிஸ்து இறந்து உயிர்த்தெழும் வரை சாவு மனிதனைத் தன் பிடியில் வைத்திருந்தது. கிறிஸ்துவின் உயிர்ப்பினால் அந்த மரணபயம் அகற்றப்பட்டு விட்டது என்கிறார் புனித பவுல்.

'சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? எனக் கேட்பதன் மூலம் கிறிஸ்து இறப்பின்மேல் கொண்ட வெற்றி எமக்கு சாவின் கொடுக்கை எடுத்து விட்டது என்கின்றார். கொடுக்கு என்ற எண்ணக்கருவை பின்வருமாறு விளக்கலாம். சிறிது காலத்துக்கு முன்னர் டயவெற்றீஸ் (சீனி வியாதி) மரணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முடியும். அதற்கு தடுப்பு மருந்தில்லை என்ற நிலை அனைவரையும் பயத்தில் வைத்திருந்தது. ஆனால் INSULIN என்ற மருந்து கண்டு பிடிக்கப்பட்டதும் சீனி வியாதி மரணத்தைக் கொண்டுவரும் என்ற மரணபயம், அதாவது கொடுக்கு எடுக்கப்பட்டு விட்டது. INSULIN சீனி வியாதி வராமல் தடுக்காது. வியாதியினால் வரும் துயரத்தை நீக்காது. ஆனால், சீனி வியாதி வந்தால் சாவில் முடியும் என்ற மரண பயத்தை, கொடுக்கை எடுத்து விட்டது. வியாதியோடு வாழக் கற்றுக் கொள்கிறார்கள்.

## இறப்பு வாழ்வின் முடிவல்ல

இறப்பு நிஜமானது. அதனை மாற்ற முடியாது, தடை செய்ய முடியாது, மெழுகால் பூசி மறைக்க முடியாது. ஆனால், இறப்பு வாழ்வின் முடிவல்ல என்ற பேருண்மையை இயேசு தமது உயிர்ப்பினால் நிஜமாக்கினார். இறப்பதன் மூலம்தான் உயிர்ப்பில் பங்குபெற முடியும் என்ற நிபந்தனையையும் விட்டுச் சென்றுள்ளார். இறப்பு வாழ்வின் முடிவல்ல என்பதை நாம் அறிந்திருந்தும் சாவு விளைவிக்கும் துயரம், இழப்பு, வேதனை தொடர்ந்தும் எம் மனங்களில், இதயங்களில், நினைவுகளில் இருக்கத்தான் செய்கிறது.

இறப்பைத் துணிவுடன் எதிர்கொள்ள, அதனோடு ஒப்புரவாகிட பயிற்றப்பட வேண்டும். அதனை எதிர்கொள்ள நமக்குக் கிடைக்கும் துடுப்பு கிறிஸ்தவ நம்பிக்கையாகும். அதாவது கிறிஸ்துவின் உயிர்ப்புதான். இறப்பைத் துணிவோடும் எதிர்நோக்கோடும் எதிர்கொள்ள உதவுவது கிறிஸ்துவின் உயிர்ப்பின் மேலுள்ள நம்பிக்கைதான். அதனால்தான் புனித பவுல் 'கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எமது நம்பிக்கை பொருளற்றதாகி விடும்' என்கின்றார்.

## உயிர்ப்பில் நம்பிக்கை

உயிர்ப்பில் நம்பிக்கை வைப்பது என்பது உயிர்ப்பு ஞாயிறன்று என்ன நடந்தது என்ற கடந்த கால வரலாற்றை ஆராய்வதோ, அல்லது கிறிஸ்தவர்கள் எப்படி உயிர்த்தெழுவர் என்பதைப்பற்றி விவரணம் செய்வதோ அல்ல. மாறாக, உயிர்ப்பு என்ற மறையுண்மை எமது வாழ்வுக்குக் கூறும் செய்தி என்ன என்பதை அறிந்து உயிர்த்த வாழ்வை இன்று எவ்விதம் வாழ்வது எனக் கண்டு கொள்வதாகும்.

'இயேசு ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் நம்பினால் மீட்புப் பெறுவீர்கள்' (உரோ 10:9) எனப் புனித பவுல் கற்பிக்கின்றார். 'வாயார அறிக்கையிடுவதும்' 'உள்ளூர நம்புவதும்' ஒன்றுதான். அதேபோன்று 'இயேசு ஆண்டவர்' என்பதும், 'கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்தார்' என்பதும் ஒன்றுதான். அதற்கு இணையான அறிக்கை 'கிறிஸ்து இயேசு' என்பதாகும். 'கிறிஸ்து' என்பதன் பொருள் மெசியா அல்லது அருட்பொழிவு பெற்றவர் என்பதாகும். அதாவது நாசரேத்தூர் இயேசுவை, சிலுவையில் அறையப்பட்ட தச்சன் ரபியை கிறிஸ்து ஆண்டவராக ஏற்கும்போது எமது நம்பிக்கை உருப்பெறுகிறது.

## சான்று பகர்வது நம் கடமை

உயிர்ப்பின் மறையுண்மை எமது நம்பிக்கையின் மையமாக உள்ளது. தொடக்க கால திருச்சபையின் நற்செய்தி அறிவிப்பும் உயிர்ப்புக்குச் சான்று பகர்வதாகவே அமைந்தது. யூதாசுக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்பட்டவருக்கான தகுதி அவர் 'ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாய் விளங்க வேண்டும்' என எதிர்பார்க்கப்பட்டது. நாம் ஒவ்வொருவரும் திருத்தூதராக அழைக்கப் பட்டுள்ளோம். உயிர்த்த ஆண்டவரின் மகிழ்வையும் நம்பிக்கையையும் எமது வாழ்வில் பிரதிபலித்தால் நாம் எதைச் செய்பவர்களாயிருந்தாலும் உண்மையிலேயே நாமும் திருத்தூதர்கள்தான்.

இன்று கிறிஸ்தவர்கள் ஊக்கமற்றவர்களாக, எழுச்சியற்றவர்களாக, அரையுறக்க நிலையில் உள்ளவர்களாக, சுறுசுறுப்பற்றவர்களாக, உயிரற்றவர்களாக வாழக் காரணம் உயிர்தெழுதலிலுள்ள நம்பிக்கை மங்கி மழுங்கிப் போய் விட்டதால்தான். தொடக்ககால கிறிஸ்தவர்களுக்கு அனைத்தும் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டே இடம்பெற்றன. அவர்கள் எண்ணிக்கையிலும் தரத்திலும் வேகமாக வளர்ச்சியடையக் காரணம் உயிர்ப்பின் ஒளியில் ஒன்றித்திருந்தார்கள். அவர்களது சான்று பகரும் வல்லமை பிறரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரணத்தை வென்ற மனிதன்



மரணமதை வென்றார்
மறுவாழ்வு பெற்றார்
அருணனவன் போல
அவருயிர்த் தெழுந்தார்
வருணமது போல
வானமதில் இருந்து
கருணையது பொழிவார்
கடவுள்மகன் இயேசு!

காட்டியவன் கொடுத்தான்
கனிந்துருகி நின்றார்
வாட்டியவர் எடுத்தார்
வாய்மூடி நின்றார்
கூட்டியவர் வந்தார்
கூட்டமதைத் தூற்ற
கேட்டதனை நடந்தார்
கிறிஸ்துஅவர் தேவன்!

உண்மையவர் வாழ்க்கை
ஒரு குறையும் இல்லை
ஒண்மையவர் உள்ளம்
ஒவ்வொன்றும் அறிவார்
நன்மையவர் செய்தார்
நன்றியிலா மக்கள்
தின்மையது புரிவார்
தேடிப்பழி சூழும்!

மன்றுஎலாம் மக்கள்
மதம்பிடித்தார் போல
கொன்றுவிடு என்று
குரல் எழுப்பலானார்!
நன்றுஎலாம் அறிவார்
நாதன்அவர் இயேசு
ஒன்றும்அவர் பேசார்
உத்தமனார் அல்லோ!

பாடுமிகப் பட்டார்
பாரமரச் சிலுவை
கோடுவரை சுமந்தார்
கொடியவர்கள் முன்னம்
ஆடுஎன ஆனார்
ஆவியது துறந்தார்
ஈடுஇலாத் தியாகம்
இவ்வுலகு போற்றும்

– வாகரைவாணன் –

கவர்ந்தது. நான்கு நற்செய்தியாளர்களை விட புனித பவுலின் மடல்களில் பெரும்பாலும் ஒவ்வொரு பக்கத்திலும் உயிர்ப்பு மறையுண்மை இழையோடுகின்றது என்றால் மிகையாகாது.

### உயிர்ப்பு மறையுண்மையை புரிந்து கொள்வோம்

உயிர்ப்பு பற்றி அவநம்பிக்கையாளர் எழுப்பும் வினாக்களுக்கு புனித பவுல் தரும் பதில் இதுவே. 'அறிவிலியே, விதையைப் போன்றுள்ள மரத்தையோ, தாவரத்தையோ கண்டிருக்கிறாயா? அல்லது யாராவது மரத்தை அல்லது தாவரத்தை விதைத்ததை கண்டிருக்கிறாயா? இல்லவேயில்லை. ஏனெனில் விதை மண்ணில் விழுந்து மடிகின்ற போதுதான் அது மரமாகவோ அல்லது தாவரமாகவோ வளர முடியும். அந்த நம்பிக்கையில்தான் அவர்கள் விதையை மட்டும் விதைக்கிறார்கள் அதேபோன்று இன்று விதை போன்றுள்ள நீ, இறக்கும்போது புது உருவம், புது வாழ்வு பெறுகிறாய். அந்தப் புது வாழ்வு வித்தியாசமானதாக, ஆவிக்குரிய இயல்பு கொண்டதாக, கடவுளுடைய வல்லமையால் படைக்கப்பட்டதாய் இருக்கும். நீ விதையை மட்டும் பார்த்துக்கொள். ஏனையதைச் செய்ய கடவுளிடம் விட்டுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கையும், நாமும் உயிர்த்தெழுவோம் என்ற எதிர்நோக்கும் இரு துருவங்களாக இருந்தாலும், இரு காலங்களையும் இணைக்கும் கயிறாக நிகழ்காலம் அமைந்துள்ளது. உயிர்த்த வாழ்வு பற்றிப் பேசுவதற்கோ, உயிர்த்த வாழ்வை வாழ்வதற்கோ உயிர்ப்பில் நம்பிக்கை அவசியமான நிபந்தனையாக இருக்கின்றது. தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் உயிர்த்த வாழ்வை வாழ்ந்தனர். அத்தகைய வாழ்வை வாழ நாமும் அழைக்கப்படுகின்றோம்.

## உயிர்த்த வாழ்வை வாழ்ந்திடுவோம்

உயிர்த்த வாழ்வை எப்படி வாழ்வது என்பதுதான் நமது ஏக்கமாக, தாகமாக இருக்க வேண்டும். 40 நாட்கள் எம்மையே ஒறுத்து நோன்பிருந்து, செபித்து, தான தருமம் செய்ததால் இன்று உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகையில் எம் வாழ்விலே உயிர்ப்பு தரும் புத்துணர்ச்சியை, மகிழ்ச்சியை அனுபவிக்கின்றோம். புது வாழ்வை வாழத் துடிக்கின்றோம்.

வெறுப்புள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தம் உள்ள இடத்தில் மன்னிப்பையும் ஐயமுள்ள இடத்தில் விசுவாசத்தையும், அவநம்பிக்கையுள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், துன்பம் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும் நாம் விதைக்கும்போது உயிர்த்த வாழ்வை வாழ்கின்றோம்.

நாம் தேர்ந்துகொண்ட திருமண வாழ்வில், துறவற வாழ்வில், அர்ப்பண வாழ்வில் இறுதிவரை பிரமாணிக்கமாக இருக்கும்போது, வாழ்வில் வரும் சகல துன்பங்களையும் சிலுவைகளையும் பொறுமையுடன் சுமக்கும்போது உயிர்த்த வாழ்வை வாழ்கின்றோம்.

பிறரைத் தூற்றுவதை விடுத்து அவர்களைப் போற்றும்போது, பிறரது குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களது நற்குணங்களைப் பாராட்டும்போது, பிறரைத் தீர்ப்பிடாமல் அவர்களைப் புரிந்துகொள்ள முற்படும்போது உயிர்த்த வாழ்வை வாழ்கின்றோம்.

வாடும் உள்ளங்களைக் கண்டு நாமும் வாடும்போது, துன்பத்தில் உள்ளவர்களின் துயர் துடைக்கும்போது, சுமை சுமந்து சோர்ந்திருப்போரின் சுமைதாங்கியாக நாம் மாறும்போது பிறரை அன்பு செய்யும்போது உயிர்த்த வாழ்வை வாழ்கின்றோம்.

தளர்ந்துபோன இதயங்களின் கொழுகொம்பாக மாறும்போது, நெரிந்த நாணலை முறியாமல், புகையும் திரியை அணையாமல் பாதுகாக்கும்போது உயிர்த்த வாழ்வை வாழ்கின்றோம்.

ஏனெனில், தருவதில்தான் நாங்கள் பெறுகின்றோம்.

மன்னிப்பதில்தான் மன்னிக்கப்படுகின்றோம்.

இறக்கும்போதுதான் உயிர்த்தெழுகின்றோம்.



## காட்சியும் கவிதையும் 03



க. கிறிஸ்ரி லோகநாதன்
"சோபனம்"
கத்தோலிக்க ஆலய வீதி
திருக்கோவில் 02

மமதையால் தலைநிமிர்ந்த மனிதனுக்காய் - இம்
மண்ணிலே தலைகுனிந்தான் பரமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யூதர்களின் கலை வாழ்வு

இற்றைக்கு சுமார் 3800 ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்களின் பாரம்பரியம் ஆபிரகாம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது என விவிலியம் கூறுகிறது. ஆபிரகாமை இப்ராஹிம் நபி என இஸ்லாமியர் அழைக்கின்றனர்.

இவர்களது கலை வாழ்வு மிக நுண்ணியதானது. அவர்களது இசை கலை பற்றி தாவீது அரசன் எழுதிய திருப்பாடல்கள் மூலமாக அறியலாம். இந்தத் திருப்பாடல்கள் 150 ஆகும். அனேகமான பாடல்கள் இறைவனைப் புகழ்கின்ற பாடல்கள். பல்லவர் கால அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஏனைய வைணவ ஆழ்வார்கள் அதற்கு முன்னர் சங்கமருவிய காலத்தில் காரைக்கால் அம்மையார் முதல் ஆழ்வார்கள் மூவர் (பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்) ஆகியோரது பக்திப் பாசுரங்களோடு ஒப்பு நோக்கலாம்.

மேற்கூறிய தாவீது அரசன் ஒரு பேரரசன். இவன் பாடிய இறைவனுக்குப் புலம்பல், நன்றி, காக்கும் கடவுள், மாலை மன்றாட்டு, வெற்றிக்கு நன்றி, கடவுள் போற்றி, இறைவன் போற்றி என பல்வேறு கோணங்களில் இசையோடு கூடிய பாடல்கள் பக்தியை வெளிப்படுத்துகின்றன.

"அல்லேலூயா" "தூயகத்தில் இறைவனைப் போற்றுங்கள்"
(சங் 150)

"அல்லேலூயா ஆண்டவருக்கு புதியதொரு பாடலைப் பாடுங்கள்" நடனம் செய்து அவரது பெயர்களைப் போற்றுவோமாக" மங்கள மத்தளம் கொட்டி, யாழ் இசைத்து அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக"

**(சங் 149 திருவிவி)**

மேற்கூறியவற்றிலிருந்து மத்தளம், யாழ், நடனம் ஆகிய கலைகள் சிறந்திருந்தமையும் இறைவனைப் புகழ இந்த நுண்கலைகளைப் பயன்படுத்தினர் என்பதையும் நாம் அறிகிறோம்.

"அல்" என்பது சூரியனையும் இறைவனையும் குறிக்கும். இதிலிருந்து பிறந்த சொல்லே அல்லே. லூயா என்பது 'இது புகழப்படுவது'. இறைவன் புகழப்படுகிறான் என்பவை கருத்தாகும். இந்த "அல்"இல் இருந்து அல்லாஹ் என்ற சொல் பிறந்திருக்கிறது. தாவீது அரசன் யாழ் இசைப்பதில் வல்லவன் என்பதைத் திருவிவிலியம் எடுத்துக்காட்டுகிறது. உதாரணத்திற்குப் பின்வரும் திருப்பாடலைத் தருகின்றோம். திருப்பாடல் 114:

எகிப்து நாட்டை விட்டு இஸ்ரயேலர் வெளியேறிய பொழுது, வேற்று மொழி பேசிய மக்களை விட்டு யாக்கோப்பின் குடும்பம் புறப்பட்ட பொழுது, யூதா அவருக்குத் தூயகம் ஆயிற்று, இஸ்ரயேல் அவரது ஆட்சித் தளம் ஆனது. செங்கடல் கடந்து, ஓட்டம் பிடித்தது, யோர்தான் பின்னோக்கிச் சென்றது. மலைகள் செம்மறிக் கிடாய்கள் போலும் குன்றுகள் ஆட்டுக் குட்டிகள் போலும் துள்ளிக் குதித்தன. கடலே! நீ விலகி ஓடும்படி உனக்கு நேர்ந்தது என்ன? யோர்தானே! நீ பின்னோக்கிச் சென்றது ஏன்? மலைகளே! நீங்கள் செம்மறிக் கிடாய்கள் போலக் குதித்தது ஏன்? குன்றுகளே! நீங்கள் ஆட்டுக்குட்டிகள் போல் துள்ளியது ஏன்? பூவுலகே! தலைவர் முன்னிலையில் நடுநடுங்கு! யாக்கோபின் கடவுள் முன்னிலையில் நடுக்கமுறு! அவர் பாறையைத் தண்ணீர்த் தடாகம் ஆக்குகிறார். இவை அம்மன்னன் யாழிலே வல்லவன் என்பதையும், கவிஞன் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

தாவீதுக்குப் பின்னர் சொலமன் என்ற மாமன்னன் யூதரை ஆட்சி புரிந்தான். இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்பு

இறை வடிவானது அன்பு
குறைகள் மறப்பது அன்பு
நிறைகள் காண்பது அன்பு
நீடித்து நிற்பது அன்பு.. அன்பு.. அன்பு..

அன்பு அகந்தை கொள்ளாது
அன்பு வருமம் கொள்ளாது
அன்பு பெருமை பேசாது
அன்பு கோபம் கொள்ளாது

தியாகத்தின் சின்னம் அன்பு
இரக்கத்தின் இருப்பிடம் அன்பு
ஆனந்தத்தின் இருப்பிடம் அன்பு
பிரச்சினைகளின் இருப்பிடம் அன்பு

அன்பு நிலையாய் இருப்பது
அன்பு தேனாக இனிப்பது
அன்பு எல்லோரும் தேடுவது
அன்பு ஊக்கத்தைத் தருவது

பெற்றோர் மீது மலரும் அன்பு பாசம்
பெரியோர் மீது மலரும் அன்பு மதிப்பு
ஏழை மீது மலரும் அன்பு கருணை
நண்பர் மீது மலரும் அன்பு நட்பு
முதியோர் மீது மலரும் அன்பு தியாகம்
இளையோர் மீது மலரும் அன்பு இரக்கம்
கடவுள் மீது மலரும் அன்பும் பக்தி

- ரோஜா. சந்திரசேகரம் -

பல்வேறு விஞ்ஞானத் துறைகளிலும் இசையிலும் கலையிலும் வல்லவன். பெரும் உளவியல் அறிஞன். மிருகங்களினது மொழியும் பறவைகளினது மொழியும் மன்னன் சொலமனுக்குத் தெரிந்திருந்தன என்று விவிலியம் கூறுகின்றது.

தாவீது அரசர் ஒரு பெருங் கோவிலைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். குறிப்பேடு என்ற நூல் இதனைத் தருகின்றது. இப்பகுதியில் 22ம் அதிகாரம் கோயில் கட்டுவதற்கான ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. "கடவுளின் கோயிலைக் கட்டுவதற்காக செதுக்கப்பட்ட கற்களைத் தயார் செய்வதற்கு கல் தச்சரை ஏற்பாடு செய்தும், வாயிற் கதவுகளுக்கு தேவையான ஆணிகளையும் கீழ் அத்திவாரத்திற்கு ஏராளமான இரும்புகளையும் அளவிடமுடியாத வெண்கலத்தையும் தயார் செய்தார். எண்ணிலடங்காத கேதுரு மரங்களையும் தயார் செய்தார். ஆண்டவருக்குக் கட்டப்படவேண்டிய கோவிலோ பெரியது. உலகெங்கிலும் பெரும் புகழும் மாட்சியும் பெற்றதாக இருக்க வேண்டும்"

இக்கூற்றிலிருந்து யூத மக்கள் கலையில் சிறந்திருந்தார்கள் என்பதை நாம் ஊகிக்க முடியும்.

சாலமொன் ஒரு பெரும் மாளிகையைக் கட்டினான். சலவைக் கற்களினால் அதை அலங்கரித்தான். வெண்கலம், பொன் பூசப்பட்ட தூண்களால் அம்மண்டபத்தை அழகு செய்தான். வேறொரு நாட்டு அரசியை அம்மாளிகையைப் பார்வையிட அழைத்தான். சபா மண்டபத்திற்கு வந்த அரசி அம்மண்டபம் நீரினால் நிறைந்திருக்கின்றது என எண்ணி முன்னாடையைத் தூக்கினாள். சாலமோன் மன்னன் அது நீர் அல்ல தூய்மையான பளிங்குக் கற்கள். அதனடியில் நீங்கள் பார்ப்பது செயற்கை மீன்களும் பூக்களுமே என விபரித்தான். அப்பொழுது அரசி, அரசே நான் தவறிழைத்து விட்டேன் எனக் கூறினாள்.

இச்சம்பவம் திருக்குரானில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

She Was Asked to enter
That lofty palace; but
When she saw it, she
Thought it was a lake
Of water, and she (Tucked up her skirts)
Uncovering her legs
He said: "this is
But a palace paved
Smooth with slabs of glass"
She said: 'O my lord!'
I have in deed wronged
My soul ............'

(The Ants Chapter 44 - Quran)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனவே, பண்டைய யூதர்களின் கலை வாழ்க்கையைப் பற்றி அறிந்து நாம் பெருமைப்படுகின்றோம்.

கி.மு. 1ம் நூற்றாண்டு, கி.மு. 44 பலஸ்தீனாவை (யூதேயா, கலிலேயா, சமாரியா, இது மையா, அரேபியாவின் ஒரு பகுதி, தெற்கே கீசா பள்ளத்தாக்கு வரை) ஆட்சி புரிந்த மகா ஏரோது மன்னன் தங்கத்தினால் ஜெருசலேம் தேவாலயத்தை நிர்மாணித்ததாக அறிகின்றோம். கி.பி 70ம் ஆண்டு இத்தேவாலயம் ரோமர்களால் அழிக்கப்பட்டது.

வரலாற்றில் மகா என்ற பெயரோடு விளங்கியவர்களில் மகா ஏரோது, ரஷ்யாவின் மகா பீட்டர், கிரேக்கத்தின் மகா அலெக்சாண்டர் என வரலாறு குறிப்பிடுகின்றது. இலங்கையில் மகா பராக்கிரமபாகு என்கின்ற அரசன் பற்றி மகாவம்சம் என்ற காவியம் - வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது.

மேற்குறிப்பிட்ட மகா ஏரோது சாக்கடலுக்கு (Dead) அண்மிய மலைச் சாரலில் ஒரு மாபெரும் பாதுகாப்புக் கோட்டையை அமைத்தான். 38 மாடிகளைக் கொண்ட அந்த காவல் கோபுரத்திற்குப் பெயர் மசாடா என்பதாகும். (தற்போது மாஸ்னடா என்ற மோட்டார் வாகனங்கள் அப்பெயரில் இயங்குகின்றன.

கி.மு. 1ம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் இத்தகைய பிரமாண்டமான கோட்டை ஒன்றறை அமைப்பதாக இருந்தால், அக்காலத்து கலைஞர்களையும் பொறியியலாளர்களையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யூதர்களது சமூக வாழ்விலும் கலாசார வாழ்விலும் கலை முதன்மை பெற்றது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. (கானாவூர் கல்யாணம், புதிய ஏற்பாடு யோவான் நற்செய்தி 2ம் அதிகாரம்)

இப்பகுதியில் யூதரின் தூய்மைச் சடங்குகள் பற்றியும் விருந்தினரது காலைக் கழுவுவதற்காக வைத்திருந்த 6 கல் தொட்டிகள் பற்றியும் திருமண விழாவில் பரிமாறும் திராட்சை இரசம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

முடிவாக, இன்று உலகெங்கிலும் யூதர்கள் பரந்து வாழ்கின்றனர். மிகப் பெரும் பணக்காரர்களும் அவர்களே. அவர்களது கற்பனை ஆற்றல் அவர்களது செல்வத்திற்கு வழி கோலியது. கற்பனை ஆற்றலே கலை வளத்திற்கும் மெருகூட்டும். இசை ஞானம் உள்ளவர்கள் மத்தியிலே ஓர் இசை வல்லான் தோன்ற முடியும். விஞ்ஞானிகள் பலர் வாழ்கின்ற நாட்டில்தான் ஒரு விஞ்ஞான மேதை தோன்ற முடியும். நல்லவர்கள் மத்தியில்தான் ஒரு சான்றோன் உருவாக முடியும். அத்தகைய சான்றோர்கள் வாழ்ந்த பூமியிலேதான் யூத குலத்தில் பகவான் இயேசு அவதரித்தார்.

**- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஜ. மத்தியு F.C -**

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி



தந்தையே! வாழ்வில் உம்மை யாம்
அன்பு செய்தோம். உமது இடத்தை
இனி யாரால் நிறைவு செய்ய முடியும்?
எம் எண்ணங்கள் எந்நாளும் உங்களுடனேயே.
உங்கள் வானகப் பயணத்திலும்
இன்னும் அதிகமாக உம்மை அன்பு செய்கிறோம்.

- குடும்பத்தினர்

அமரர். சவரிமுத்து இருதயம்

மலர்வு - 05.08.1924
உதிர்வு - 15.03.1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



செண்பகக்குழல்வாய்மொழி

## தமிழாஞ்சலி

தாயே தமிழே
தலைநா ளமுதே
பூவே புனலே
புலரிப் பொழுதே

வெறும்
மொழியென உன்னை
விழித்திடலல்லேன்
என்
உயிரென உன்னை
உணர்த்திட வல்லேன்

ஒன்புகழ்சேர்
தென்புலவர் வழிநின்று
நின்னை அடிதொழுது
நான் படைக்கும் சிறுபனுவல்
மண்ணில் உனக்கு
அணிசேர்த்தால் அகமகிழ்வேன்

எண்ணில் அடங்காத
இலக்கியத்துள் ஒருதுளிநான்
எண்ணி வழிநடத்து என்னை

## இறையாஞ்சலி

என்
உயிர்வெளியில் எங்கும்
உறைந்து கிடப்பவனே -
குழைத்தெடுத்த வண்ணத்துள்
ஓவியமாய்க் குடியிருப்பவனே -
நதிகளுக்குச் சதங்கை கட்டி
நர்த்தனமாட வைத்தவனே -
கருவறையில் நான் கேட்ட
கனிமொழியால் காவியத்தை
செதுக்கிவைக்க நீதந்த
உயிரென்னும் உளிகொணர்ந்தேன் -

கடுகளவு விதையெந்தன்
கற்பனையைக் கடலாக்கு -

எல்லாமே நீதந்த
எழுத்தறிவால் வந்ததென
வணங்கியுன்னைத் தொடங்குகிறேன்

இந்த உளியும் புதிது
அந்த உளியின் வலியும் புதிது

மூவொரு இறைவனாம் என்
முழுமுதற் கடவுளே.....
ஆதியே போற்றி...

## போர்த்துக்கல்லிருந்து புதிய ஞானம்

"உலகத்தின் எல்லைவரை நற்செய்தி
உரைத்திடுங்கள் சென்று"என யேசுசொன்னார்
நிலவுக்குக் கீழுறையும் உலகின்மேற்கில்
நிலைபெற்று நற்செய்தி வாழ்வுற்றது
கீழ்த்திசையில் இதைச்சுமந்து வந்தபேர்கள்
கருத்தாக விதைத்தவிதை கருகிடாது
மழையெனவே வந்துநின்றார் மேற்குலகார்
மறைவாக்கு நிறைவேறச் சித்தமாச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போர்த்துக்கல் நாட்டிருந்து வேகத்தோடு
பூனைக்கண் பறங்கியரும் புறப்பட்டார்
பாராளும் ஆசையொடு அவர்போற்றும்
பரிசுத்த வேதத்தைச் சுமந்துஈழக்
கரைதன்னில் அவர்பாதம் பதித்தஅன்றே
கத்தோலிக் கம்இங்கு விதையுண்டது
இறையேசு அவர்வார்த்தை ஈழமண்ணின்
திசைதோறும் ஒலித்திடவே பெருமைகொண்டார்

திரைகடல் ஓடியவர் திரவியத்தை
திரட்டிவர மறந்தாரோ; மறக்கவில்லை
கரைதோறும் கோட்டைகொத் தளத்தோடு
கோவிலொன்றைக் கரிசனையாய்க் கட்டுவிக்க
மறைபரப்பில் மனத்தளவில் கொண்டதாகம்
மற்றெல்லாப் பணிகளையும் விஞ்சி;தேச
வரைபடத்தில் அவர்வரைந்த புதியபாதை
வரலாற்றில் சுவடுகளாய் வாழ்கிறது

அவர்சென்ற திசையெல்லாம் கத்தோலிக்கம்
அழியாத சுவடொன்றைப் பதிக்கிறது
தவஞ்செய்த மாந்தரெல்லாம் தழுவியதை
தமக்கென்று மீட்பொன்றை அடைந்துகொண்டார்
கல்வாரித் திசைநோக்கிக் கருணைக்காற்று
கடல்தாண்டி ஈழத்தை நனைக்கிறது
நல்லாயன் மழையீது புதிதேயென்று
நலமோடு புகழ்பாடித் தோத்தரித்தார்

வானத்து மன்னாவும் ஈழமண்ணில்
வந்திறங்கி ஆன்மபசி தீர்க்கிறது
ஞானத்து நீராடி மாந்தரெல்லாம்
மறுவாழ்வு பெற்றவர்போ லாகின்றார்
தேனொத்த இசைகலந்து தேவபாஷை
தெவிட்டாது செவிபாய்ந்து மயக்கிறது
வானிங்கு வழிதவறி வந்ததுவோ...!
வசப்பட்டுப் போனார்கள் மனிதரெல்லாம்

ஈழத்தில் புதியவேதம் புதியஞானம்
இவராண்ட மண்ணெல்லாம் மிளிரக்கண்டார்
ஆழ்மனதில் அவர்விதைத்த தேவவார்த்தை
ஆங்காங்கே முளைவிட்டு எழவுங்கண்டார்
வாழ்வாங்கு புதுவசந்தம் தளிர்த்தகாலை
வந்ததுகாண் பெருந்துயரம் நமதுமண்ணில்
வீழ்ந்ததுவாம் போர்த்துக்கல் அரசு;சேர்ந்து
வீழ்ச்சியதன் விளிம்பினில்கத் தோலிக்கம்

நடுக்கடலில் தத்தளிக்கும் படகுபோல
நமதன்புக் கிறீஸ்தவர்கள் ஆனபோதும்
கடுகளவு நம்பிக்கை தளர்ந்திடாது
கருத்தோடு கர்த்தாவை வேண்டிக்கொண்டார்
விடுகதைபோல் அவரான்ம வாழ்வுமிங்கு
விடையின்றிப் புதிருக்குள் அமிழ்ந்தபோதும்
தொடுவானில் நம்பிக்கை அரும்புமென்று
துணிவோடு தொழுதார்கள் விடைதானென்ன...?

வேரோடு சாய்வதற்காய் விதைத்ததல்ல
விழுதிட்டு ஆல்போல செழித்தவேதம்
நூறாது சுடுசாம்பர் நுணுந்திருந்து
நெடுங்காலம் வாழுஞ்செந் தணலாமீது
சோராது போராடி வாழ்ந்தஅதன்
சுவையான கதைசொல்வேன் இரந்துகேளீர்
போராடி வாழவெனச் சித்தங்கொண்டு
புறப்பட்ட வேதத்தின் கதையிதுதான்

– வளரும் –

# நல்ல நூல்களின் துணை

- நெப்போலியனுடைய வாழ்வை உயர்த்தியது ஹோமருடைய அற்புத நூலே
- ஹிட்லருடைய வெற்றிக்குக் காரணம் மெக்கியவல்லி எழுதிய "இளவரசன்" என்ற நூலே
- ஆபிரகாம் லிங்கனின் எண்ணங்களை உயர்த்தியது "வாசிங்டன் வரலாற்று" நூலே
- டாக்டர் சிவசூரியனின் வாழ்வைச் சீர்படுத்தியது டாக்டர் வின்சன் பேல் எழுதிய "பவர் ஒப் பாசிட்டிவ் திங்கிங்" என்ற நூலே
- பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது ரூஸோவின் "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூலே

– திருமதி. சங்கர் சாந்தி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## உலகத் திருச்சபை பற்றிய பொது அறிமுகம்

திருச்சபை என்பது நமதாண்டவர் அழைத்த அன்புக் குடும்பமாகும். இதனை வரைவிலக்கணப்படுத்தினால் "அனைத்துலக மீட்பராம் இறைமகன் இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்டு அவருடைய போதனைகளின்படி வாழும் இறைமக்கள் கூட்டம்" எனக் கூறலாம். மேலும், இன்று திருச்சபை எனக் கூறிக்கொண்டு பலவிதமான சபைகள் செயற்படுவதைக் காணலாம். ஆனால், உண்மையான திருச்சபைக்குரிய சில பண்புகளை நோக்குமிடத்து, ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் எனும் நான்கு தூண்களால் கட்டப்பட்டதே திருச்சபையாகும். இத்தகையதொரு திருச்சபையினையே நமதாண்டவர் ஏற்படுத்தினார்.

அதாவது, 'ஏகம்' எனப்படுவது சபையினர்களுக்கிடையே உள்ள ஒருமைப்பாட்டைக் குறிக்கிறது. இவ்வொற்றுமையானது அவர்களிடையே காணப்படும் விசுவாசம், கீழ்ப்படிவு, பங்கெடுக்கும் திருவழிபாடுகள், திருவருட்சாதனங்கள் போன்றவற்றிலும் பிரதிபலிக்கின்றது.

'பரிசுத்தம்' எனப்படுவது திருச்சபையின் மாசற்ற தன்மையைக் குறிக்கிறது. அதாவது திருச்சபையானது பாவிகளைத் தம் உறுப்பினர்களாகக் கொண்டிருந்தாலும் அது தன்னிலே தூய்மையானதாகக் காணப்படுகிறது. மேலும், அது பாவிகளாகிய தன் உறுப்பினர்களை பரிசுத்தமாக்கும் போதனைகளையும், திருவருட்சாதனங்களையும் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

'கத்தோலிக்கம்' என்பது திருச்சபையானது ஒரு நாட்டினருக்கும், இனத்தினருக்கும், பண்பாட்டுக்கும் உரியதொன்றல்ல, அது அனைத்து நாட்டினருக்கும், அனைத்துப் பண்பாடுகளுக்கும், அனைத்துமொழியினருக்கும், அனைத்துக் காலத்துக்கும் உரியது எனும் திருச்சபையின் பொதுத் தன்மையினைக் குறித்து நிற்கின்றது.

மற்றும் அப்போஸ்தலிக்கம் என்பது, இறைமகன் இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையானது, அப்போஸ்தலர் காலம்தொட்டு இன்றுவரை தொடர்ச்சியாக ஒரே தலைமைத்துவத்தின் கீழ் இருந்துவருவதையும் அதன் தலைமைத்துவமானது அப்போஸ்தலர் காலந்தொட்டு இன்றுவரை பிளவுபடாமல் இருந்துவருவதையும் குறிக்கின்றது.

எனவே, இவை நான்கு பண்புகளாலும் அலங்கரிக்கப்பட்டு வழிநடத்தப்படும் சமூகத்தையே திருச்சபை என அழைக்கின்றோம். மேலும், திருச்சபை வரலாறு என்பது, ஆரம்பந்தொட்டு இன்றுவரை அதன் வளர்ச்சி, அதன் தாபகம், அதன் ஆரம்பம், அமைப்பு, வழிபாட்டு முறை, அதன் அபிவிருத்தி, அது புரிந்துள்ள நல்ல செயல்கள், முகம் கொடுத்துள்ள சவால்கள், பெற்றுள்ள வெற்றிகள், தோல்விகள் போன்றவற்றைத் தொகுத்துக் காட்டுவதே திருச்சபை வரலாறு எனப்படும்.

மேலும், ஆதித் திருச்சபையின் வரலாறு பற்றிய விபரங்களை நாம் திருத்தூதர் பணி நூலிலும், அப்போஸ்தலிக்க பிதாக்களின் நூலிலும், மறைவு நூல்களிலும் காணலாம். அத்துடன் அக்காலத்தில் எழுதப்பட்ட அப்போஸ்தலர்களின் திருமுகங்கள், பேதுருவின் மறைபரப்புப் போதனை, பர்ணபாவின் கடிதம், பவுலின் பணி நூல்கள், யோவானின் பணி நூல்கள் போன்ற மறை நூல்களிலும் ஆதித் திருச்சபையின் வளர்ச்சிகள் பற்றி அறிய முடிகிறது. எனவே, மேற்கூறப்பட்ட பல்வேறு விடயங்களைக் கடைப்பிடித்து, பல்வேறு வழிகளிலும் பரந்து விரிந்து காணப்படுவதே நாம் வாழும் இத்திருச்சபையாகும். இது ஏனைய சபைகளைப் போன்றல்லாது தன்னகத்தே தனிச் சிறப்புடையதாக விளங்குகிறது. எனவே, நமதாண்டவர் ஏற்படுத்திய அன்புத் திருச்சபையினை எச்சபைகளுடனும் ஒப்பிடவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பேய்க்காற்றில் கூரை போன தர்ம விசாரம்

அ.ச.பாய்வா

மனித மனதின் அதீத ஆசைகள், தனது இருப்பைப் பற்றிய நம்பிக்கைகள், தீர்க்க தரிசனமற்ற மானுட அரசியலென எல்லாமே பொடிப்பொடியாய்ச் சிதறுண்டு, பூர்வீகம் என்பதே கேள்விக் குறியாகி, சுயபச்சாத்தாபத்தோடு எனது கேள்விகளுக்குள் என்னைத் தேடும் முயற்சியில் நான் எதேச்சையா னவைகளுக்குள் சிக்கிக்கொள்வதுகூட ஒருவகைத் தோல்விதானே.

வேண்டுமென்றே நான் மறந்துபோயிருந்த எனது கிராமத்து நினைவுகள் என்னைத் துரத்துவதும், அதிலிருந்து நான் ஒழிந்துகொள்ள முயல்வதும் இப்போதெல்லாம் ஏனோ வாடிக்கை யாகிப்போனதொன்றாய் ஆயிற்று எனக்கு. இத்த னைக்கும் நானொன்றும் அதீத காலத்துச் சிந்தனையில் உழல்பவனுமல்ல.

என்னால் மறந்துவிடவே முடியாத பல விடயங்களின் பட்டியலில் எங்கள் கிராமத்து வீடு முதலிடம் பிடிக்கிறது என்றால் அதன் முக்கியத்துவத்தை நான் வேறு விளக்க வேண்டியதில்லை. நான் மிகவும் நேசித்த அந்தக் கிராமிய வாழ்க்கை என்னை விட்டுப் போனதில் எனக்குள் ஏற்பட்ட தாக்கம் சொல்லுந்தரமற்றது.

எனது கிராமத்து நாட்களில் நான் மனிதருடன் பேசியதைவிட இயற்கையோடு பேசியதுதான் அதிகமென்பேன். பாடசாலை தவிர்ந்த நேரங்களிலெல்லாம் நானும் முண்டாசு கட்டிக்கொண்டு எங்கள் மாந்தோப்பில் பாரதியைப்போல் விட்டேத்தியாய்ப்ப பாடித் திரிந்திருக்கிறேன்.

நான் தொடர்ந்தும் அங்கிருந்திருந்தால் ஒருவேளை பாரதியைப்போல் பெரிய மீசையொன்றையும் வைத்திருப்பேனோ என்னவோ...? ஆனால் காலமோ என்மட்டில் வேறொரு கணக்குப் போட்டிருந்ததை அறியாமலிருந்ததுதான் என் துரதிஷ்டம். இப்பொழுது எனக்கோ பாரதியையும் அவனது குயில்பாட்டையும் மறந்து வெகுநாளாகின்றன.

கிராமத்தில் அப்பா நிகழ்த்திய தர்ப்பாரும் அதன் சரித்திரத்தில் முதற்தடவையாக எங்கள் கிராமத்தை ஆக்கிரமிப்பாளர்கள் சூழ்ந்த ஓர் அதிகாலைப் பொழுதில் முழுக் கிராமமுமே இடம் பெயர்ந்ததும் அவர்கள் நிகழ்த்திய பேயாட்டத்தில் ஒரே நாளில் சூறையாடப்பட்ட அவர் தேடித் தேடிச் சேமித்து வைத்திருந்த கலைப் பொருட்களின் நினைவுகளும் கிராமத்துக்கான மீள் வருகையின் பின் அப்பாவை முற்றாகவே செயலிழக்கச் செய்ய என்னுடைய மிகச் சிறிய வயதிலேயே நான் அவரையும் தொடர்ந்து தாயையும் இழந்தது எனது இன்னொரு துரதிஷ்டம்.

எங்களுடையதை வீடென்றா சொன்னேன்! வீடென்கிற சொல்லுக்கப்பாலும் அதற்கிருந்த மேட்டிமை அப்பாவின் நாடி நரம்புகளிலோடிய கிராமத்து இரத்தத்தின் இன்னொரு வடிவந்தானென்று சொன்னாலும் பொருந்தும்.

காற்றுப் புகாத இரண்டு அறைகள், அந்த இரண்டையும் இணைக்குமாப்போல் முன்னாலொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீண்ட விறாந்தையென்கிற சாட்ஷாத் கிராமத்து வீட்டின் லட்ஷணங்களையும் மீறிய கலையழகோடு, இப்படித்தானிருந்தது என்று விபரிக்கமுடியாத ஒருவித அழகு.

அவருடைய அந்தக் கலைப் பொருட்களில் மிக உயர்ந்த ஸ்தானத்திலிருந்தது அவரது 'டபிள்ஸ்றிங்' கிராமபோன் பெட்டிதான். 'எச்.எம்.வி' என அதில் எழுதியிருந்ததாய் ஞாபகம். இசைத்தட்டுச் சுழலும்போது ஊசியால் இணைக்கப்பட்ட அதன் 'சவுண்ட் பொக்ஸ்' மேலெழுந்து கீழிறங்கிச் செல்வது வேடிக்கையாயிருக்கும். வெள்ளிக் கொக்கொன்று பச்சைத் தாம்பாளத்தில் இரைதேடுவது போலதான் எனக்குத் தோன்றும். பெட்டிக்குள் யாரோ ஒழிந்திருந்து பாடுகிறார்களென்றும், கையளவான அந்த வட்டத்தினுள் எவ்வாறுதான் பாடுபவர் உடலைச் சுருட்டிவைத்துக்கொண்டு பாடுகிறாரோ என்றெல்லாம் ஊரில் சலசலக்கும். ஊருக்கே இசையளித்த அந்த மாயப் பெட்டியைப் பற்றி இதைவிடவும் விசித்திரமாகவும் விட்டேத்தியாகவும் பேசிக்கொண்டது ஊர்.

'எச்.எம்.வி.' முத்திரையிலிருப்பது ஆண் நாயா பெண் நாயா என்று அதன் கவட்டுக்கிடுக்கில் தேடிக்களைத்த எனக்கு அந்த மர்மத்தை உடைத்ததும் அப்பாதான். அன்று ஊருக்கே இசை கொடுத்த கிராமபோன் பெட்டியுமில்லை; அதனை நேசித்த அப்பாவும் இன்றில்லை.

அதன்பிறகு தன்னந்தனியாய்ப் பட்டணத்துக்கு இடம்பெயர்ந்து நானனுபவித்தவை, நான் மறந்துபோக நினைப்பவைகளின் பட்டியலில் இரண்டாம் வகை.

ஆக்கிரமிப்பாளர்களின் பின்னர், எஞ்சியவைகளை ஊரார் சொந்தங்கொண்டாடியதை அறிந்துங்கூட நான் அவ்வளவாய்க் கவலைப்படவில்லை. ஒருவேளை அப்பாவின் தேட்டங்களைப் பற்றிய சந்தேகங்கள் எனக்குள் இன்னும் தீராமலிருப்பதுவும் ஒரு காரணமாயிருக்கலாம். ஆனாலும், அவற்றின் மீது எனக்கிருந்த அந்த இனம்புரியாத உரிமைத் திரவ உணர்வு, சிலவேளைகளில் அந்தச் சந்தேகங்களையெல்லாம் கேள்விக்குறியாக்கிவிடுவதுமுண்டு.

இன்னும் எனக்குள்ள ஆசை ஒன்றேயொன்றுதான். இந்த ஊர், உறவு, மண் என யாவற்றையும் துறந்து, இந்த வகை மனிதர்களற்ற கண்காணாதவொரு தேசத்தில் குடியேற வேண்டுமென்கிற எனதெண்ணங்கள் கனிந்துகொண்டிருக்கிற இந்தச் சிலநாள் இடைவெளிக்குள்ளாவது பதினெட்டு வருடங்கள் பிரிந்திருந்த அந்த எச்சங்களையும் எனது தந்தையின் நிழலாகவே என்றும் அவரோடிருந்து, அவரின் மறைவின்பின் முற்றாகவே வீழ்ந்து போனதாகக் கேள்விப்பட்ட அந்த மணியம் அண்ணரையும் நானொரு தடவை சந்திக்கவேண்டும், அவ்வளவே.

வசந்த ருதுக்களால் நிரம்பி வழியும் எனது பூமியில் ஓரிழங்காலைப் பொழுதில் கால்களைப் பதிக்கிறேன். நிறையவே மாறிப்போயிருந்தது ஊர். நவீன உலகின் திரிபுகளுக்கேற்ப அங்கு நிலவிய மாற்றங்கள் எனக்குள் எவ்வித பிரமிப்பையும் ஏற்படுத்தவில்லை. யாருமே எவர் தயவிலுமில்லை. எதுவுமே எவர் கட்டுப்பாட்டிலுமில்லையென்பது போன்ற ஒரு வித மாயை எங்கும்.

வழியில் கண்ட எவரையும் கவனியாதவனாய், ஊர் மனையை விட்டுச் சற்றே ஒதுங்கியிருந்து பிரமாண்டமாய்க் காட்சியளித்த எனது ஒருகாலத்து வீட்டை நோக்கி நடக்கிறேன்.

பரந்து விரிந்து கிடந்த எங்கள் ராஜபாட்டையோ புதர்மண்டி ஒற்றையடிப் பாதையாக ஒடுங்கிக் கிடக்கிறது. அதனையும் கடந்து எங்கள் வீட்டின் முன்னாலோடும் வாய்க்காலின்மேல் அமைக்கப்பட்ட அந்த உயர்ந்த மதகின்மேல் ஏறிநின்று பார்க்கிறேன். எனது சர்வாங்கமும் ஒடுங்கி நடுங்குகிறது. மூச்சை இழுத்தடக்கி நிதானமாய் வெளிவிட்டு என் மனதின் வக்கிரங்களைக் களைய முயல்கிறேன். தோல்விதான் மிஞ்சுகிறது. சோலையாய்ப் பூத்துக்கிடந்த அந்தப் பிரதேசம் பாலையாய்க் காய்ந்து கிடக்கிறது. அங்கிருந்த கோவிலையும் ஆன்மாவையும் பிடுங்கி எறிந்துவிட்டு வெறுமையை விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறது அதர்மம். இதையெல்லாம் நான் காணாமலே இருந்திருக்கலாம் போல் தோணியது.

சுற்றுமதில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனைத்தும் தகர்க்கப்பட்டு பாரிய இரண்டு கொங்கிரீட் தூண்களில் நிறுத்தப்பட்டிருந்த பிரமாண்டமான இரும்புக் கதிரைகளில் தொங்கி ஊஞ்சலாடிக்கொண்டிருந்த சிறுவர் கூட்டம் எனது பார்வையின் உஷ்ணத்தைத் தாங்கவொண்ணாமல் ஓடுகிறது.

அருகில் சென்று துருப்பிடித்த இரும்புக் கதவுகளை ஆதுரத்துடன் தடவிப் பார்க்கிறேன். நான் என் சிறுவயதில் அக்கதவுகளில் காணத்தவறிய கலை நுணுக்கங்கள் என்னைப் பிரமிக்க வைக்கின்றன. செய்தவனும் செய்வித்தவனும் மகா ரசிகர்கள்தான்.

இரு தூண்களிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் 'மங்களவிலா' என எழுதி ஆழமாய்ப் பொறித்துவைக்கப்பட்டிருந்தது. செப்பேடுகள் களையிழந்து கிடக்கின்றன. அம்மாவின் பெயரல்லவா அது, தடவிப் பார்க்கிறேன். அந்த ஈரடிச் செப்பேட்டில் எழுதிவைக்க ஓராயிரம் கதைகளையும் நான் படிக்கவேண்டும். ஆனால், எனக்கந்த அவகாசம் இருக்குமோ என்னவோ..?

மெல்ல நடந்து மூளியாய்க் கிடக்கும் அந்த வீட்டின் விறாந்தைக்கு வருகிறேன். என்னை இனங்கண்டும் என்னுடன் பேசத் தங்கியவாறு தூரத்தே நின்று வேடிக்கை பார்க்கும் சில உருவங்கள் தெரிகின்றன. என் வருகையின் உள்நோக்கம் அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ. இல்லை இதுவே எனது இறுதி வருகை என்பதை அவர்களே தீர்மானித்து அதன் பின்னரிந்த நிலத்தினமீது அவர்கள் . மேற்கொள்ள ஆசைப்படுகின்ற அந்த ஆக்கிரமிப்பு யுத்தத்திற்குத் தடையாயிருக்கும் எதையுமே நிர்மூலமாக்கும் வெறியும் அந்தக் கண்களில் தெரிகின்றன. இந்த எனது இறுதி உருமத்தின் மீது அவர்கள் போட்ட வரைபடம், அவர்களின் ஒவ்வொரு முகரேகைகளிலும் விரிந்து கிடக்கிறது.

இவையனைத்தையும் நிராகரித்து, வீடாயிருந்த அந்த சிதைவுக்குள் நுழைகின்றேன். மரணித்துப்போன மனித நாகரிகத்தின் எச்சங்களால் வீடு நிறைந்து கிடக்கிறது. மனிதர்களுக்குள் புதையுண்டு கிடந்த அந்த அழுகிய பிணங்கள் மேலெழுந்து பிரபஞ்சமே நாற்றமெடுப்பதாயுணர்வு.

இந்த இடத்தில்தான் அப்பாவின் 'பூனக்கிராப்' (கிராமபோன்) பெட்டி, இங்குதானவரின் துப்பாக்கி, அந்தவிடத்தில்தான் எமது பர்மா தேக்கில் செய்த கதிரைகள்... என என் மனம் கணக்குப் போடுகிறது. புகைக்குள் அவையெல்லாம் நிழல்போல வந்து, வந்த வேகத்தில் ஆவியாய்க் கரைகின்றன. ஆழமான பெருமூச்சொன்று என்னிலிருந்து எழுகின்றது. மீண்டும் வராத அந்த வசந்தங்களுக்காய் மனம் வீணாக ஏங்குகிறது.



அந்தச் சிதிலங்களுக்குள் நான் தேட முயல்வதுதானென்ன? என் ஆன்மாவைப் பற்றிய விசித்திரங்கள் புரியவைக்கமுடியாதவை. என் பிராணாயமும் அதுவே. ஒருவேளை பைத்தியகாரத்தனமாய் தோணலாம் பார்ப்பவர்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெயில் என்னைச் சுட்டெரிக்கத் தொடங்குவதை என்னுடல் உணரத் தொடங்குகிறது. வெளியே நின்று வேடிக்கை பார்க்கும் மனிதர்களுக்கப்பால் என்னை நோக்கியவாறு உரிமையுடன் வருகின்ற அந்த உருவத்தை என் மனம் ஓரளவு கணிப்பிடுகின்றது. அந்த நடையை மட்டும் என்னால் மறக்க முடியுமா? சந்தேக மேயில்லை. மணியண்ணன் தானது. ஆனாலுமிவர் ஒரேயடியாக இவ்வாறு மாறியிருக்கவேண்டாம்.

'திடும்..திடும்' என அகலக் கால் வைத்து ஒரு ராட்சசனைப் போல் வலம் வந்த மணியண்ணனா இது? என் தந்தையோடே நிழலாயிருந்து அவரின் சம்பாத்தியங்களை நிர்வகித்த மணியமா இது? நம்பவே முடியவில்லை. அதன் ஆகிருதியெங்கே...? அந்தச் செருக்கு எங்கே...? ஆனாலின்றோ, மெல்ல மெல்ல அடியெடுத்து ஒரு குழந்தையைப் போல் அருகில் வந்து என் கரங்களைப் பற்றியெடுத்து முத்தமிடுகிறது.

ஒரு சலனத் துளியில் என்னை அளவெடுத்து,

"அண்ணாச்சிய நெனவிருக்காமன..."

என்றவர் என்னை வினவிய விதம், காணக்கிடைக்காது என்றிருந்தவொன்று. தன் கண்ணெதிரே நிற்பதை நம்பவே முடியாத ஒருவகை மிகையுணர்வாலவர் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார் என்பதை உணர்த்திற்று. அந்த முகத்தில் தெரிந்த பிரமிப்பையும் ஒளியையும் எந்த மொழியாலும் எடுத்தியம்ப முடியாத ஒருவகை பிரமையென்னுள். மீண்டும் மீண்டும் அந்தப் பழைய மணியத்தை மனக் கண்ணில் கொணர முயலுகின்றேன். முறுக்கேறிய அவரின் கரங்களைப் பற்றி "ஆ...ம்.." என்கிறேன். எனது ஒவ்வொரு அங்கங்களையும் தொட்டுத் தடவி... பின்னரவர் அதில் எதைக் கண்டாரோ

"என்டராசா.. நீ சாகல்லடா..." என்றழுகிறார்.

அவரழுவது என் தந்தையை நினைத்துத்தான் என்பதை நானறிவேன். நீண்ட மௌனத்தின் பின்,

"அழிச்சுப்போட்டானுகள்... திட்டம் போட்டு எல்லாத்தையும் அழிச்சுப்போட்டானுகள். என்ட கண் மாணிக்கத்துக்கு முன்னாலதானே இதையெல்லாம் செய்தானுகள். என்னாலொன்னுமே செய்யேலாமப் போச்சுதே ராசா...."

அவர் அழுகிறார். நிழல் கவிந்திருந்த மரத்தண்டை மெல்ல அவரைத் தாங்கிச் செல்கிறேன். ஓயும்வரை அவரை அழவிட்டுக் காத்திருக்கிறேன். தன் மனதினுள் பொதிந்து கிடந்த அனைத்தையும் கொட்டித் தீர்த்துவிடவேண்டும் என்கிற ஆதங்கம் அவர் கண்களில் தெரிகிறது. மனதின் ஆழத்தில் இறுகிப்போய்க் கிடப்பவைகளை ஒவ்வொன்றாய் முக்குளித்துக் கொண்டுவர முயல்கிறார்.

"அந்தநாளய கிராமத்தனிமையெண்ட்றது லேசுப்பட்ட விசயமில்ல மன. அது ஒரு கவுரவம். உன்ர பெத்தப்பாவுக்குப் பிறகு உன்ர அப்பாவுக்குத்தானது கிடச்சிது. ஏசண்டுத்துரை நேரடியா வந்து கடுதாசி குடுத்திட்டுப் போனவரெண்டா பாத்துக்க அதுர பவர. இந்தச் சுத்து வட்டத்தில பதினாறு ஊருக்கும் அவன்தான் ராசா. அவன் வெச்சதுதான் சட்டம். அவனிப்படி வந்து நிண்டானெண்டா.... ஊர் நடுங்கும்"

நடித்துக் காட்டுகிறார். பின்னர் தன்னை சிறிது ஆசுவாசப்படுத்திக்கொண்டு தொடர்கிறார்.

"மங்களம்... உன்ர கொம்மையக்கூட ஒரு திருவிளாவிலதான் கடத்தி வந்தனாங்க. கொம்மைக்கும் அவனில விருப்பந்தான். அந்த நேரத்தில இந்த ஊர் பட்ட அமளி தொமளியப் நீபாத்திருக்கணும். இங்கிலீசுப் படந்தான். அவன்ர ரெட்டக் கொழல் 'பப்ளிகொட்' தோக்குத்தான் அப்ப நிண்டு பேசிச்சு. ஈசான மூலையில என்ட தத்தியும், எழுவான் கன்னயில உன்ரப்பன்ர தத்தியுந்தான் 'சென்றி' அந்தக் கன்னையில ரெண்டுபேர் செத்தானுகள். இப்பிடித்தான் உன்ர அப்பன் கொம்மையிர கலியாணம் நடந்திச்சு"

அவரது வீரப் பிரதாபங்களையவர் விபரிக்கிறபோது அவருக்குள்ளிருந்த வாலிபம் அவர் முகத்தில் ஒருகணம் மின்னி மறைகிறது. அவரால் மறந்துபோகவே முடியாத பல சங்கதிகள் இன்னும் எத்தனையோ. ஆனால் அவர் உடல் அதற்கு ஒத்துழைக்க மறுப்பதும் புரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




பாட்டன் பாட்டி கட்டி வைத்த
பங்களாவை விட்டுவிட்டு
படுக்கப் பாயுமின்றி
படங்கிலே புழுங்குகிறேன்
உயிர்ப்பு எப்போது?

பால் குடிக்கும் பிள்ளையையும்
பருவமான பெண்ணையும்
பாதி இரவில் அழைத்துக்கொண்டு
பத்துநாள் காட்டிலிருந்து
பச்சைக் குழந்தையை ஆற்றிலே விட்டுவிட்டு
பட்டணம் வந்து பரிதவிக்கறேன்
உயிர்ப்பு எப்போது?

பருவம் அறிந்து பயிர் செய்து
பக்குவமாய்க் குற்றி அரிசி
பாலும் தேனுடன் பகிர்ந்து
உண்டது போய்
பழுதான அரிசியும் பருப்புடனும்
பாதிக்காலம் போகிறதே
உயிர்ப்பு எப்போது?

பாதுகாப்புக்காய் பதிகிறோம்
கணக்கெடுக்கத் தரவெடுக்கிறோம்
என்று கூறி
இடர் பட்டு வந்தவர்களின்
உயிரை எடுக்கிறார்கள்
உயிர்ப்பு எப்போது?

பட்டப் பகலிலே
பந்தோபஸ்து நிறைய இருக்கையிலே
இளையவர் தொடக்கம் முதியவர் வரை
பக்குவமாய்ச் சுட்டு விட்டு
படார் என மறைய
இனந் தெரியாதோர்
இதைச் செய்தனர் - என்று
இயல்பாகக் கூறி விடுகின்றனர்
உயிர்ப்பு எப்போது?

விசேடமாக என்னிடம் சொல்ல முடியாதவை ஏராளமிருக்கலாம். அவைகளை கவனமாக விடுத்து, அவரது ஞாபகக் கண்ணிகளிலிருந்து தொலைந்துபோன ஏதோவொன்றைத் தோண்டி யெடுத்துவரும் எத்தனத்தில் நெற்றியை விரல்களால் வருடுவதும், அண்ணாந்து பார்ப்பதும், பின்னர் தன்னைத் தானே வருத்திக் கொள்வதுமென்று பெரியதொரு போராட்டமே அவருள் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

அந்த அவஸ்தையிலிருந்து அவரை விடுவிக்க அவரது குடும்பத்தைப் பற்றிக் கேட்கிறேன். எங்கோ பார்த்தவாறு அவர் 'இல்...ல' என்று சொன்ன ஒற்றைவரிப் பதிலின் இறுக்கத்தினுள் என்னென்ன அர்த்தங்கள் பொதிந்திருந்தனவோ எனக்குத் தெரியாது.

ஆனாலொன்று, அவர் சம்மந்தப்பட்ட காதல் விவகாரம் ஒன்று மாத்திரம் என் நினைவில் புகையாய் மண்டிக்கிறது. அதன் பின்னணியில் நடந்தேறிய சம்பவங்களும், கலவரமும், திடீரென அப்பெண் ஓரிரவில் நிரந்தரமாகவே காணாமற் போனதும், அந்த மர்மம் இன்றுவரை அவிழ்க்கப்படாத முடிச்சாய் அவர் மனதில் இன்னமும் சிக்குண்டு கிடப்பதாலோ என்னவோ,

"நாங்களியாணங்கட்டல்ல. எல்லாமே அவன்... உன்ரப்பாவுக்காகத்தான். நாங்களியாணங்கட்டியிருந்தா அவன் தனிச்சிப் போயிருப்பான். நான் வாண்டதே அவனுக்காகத்தான்"

அவரது பதில் முதலில் எனக்குப் பெரிய சங்கடத்தையும் பின்னர் ஆறுதலையும் தருகின்றது. தனது மனைவிக்கடுத்ததாய் தன்னை நேசிக்க ஒரு நண்பன் என் தந்தைக்கு இருந்திருக்கிறார் என்பதே ஒரு பெரிய விடயந்தான். எதையுமே யோசிக்காத, எதையுமே எதிர்பார்க்காத, எதனையும் விட்டுக்கொடுக்கின்ற நட்பொன்று இந்தப் பூமியில் விருட்சங்கொண்டதன் சாட்சியாய் மணியமண்ணன் எனக்குக் காட்சி தருகிறார்.

"ஒன்னக் கூட்டிக்கொண்டுபோய் தாறதுக்கு என்னட்டண்டா ஒண்டுமேயில்ல. ஒன்னையெல்லாம் வெச்சிச் சுமந்த இந்த நெஞ்சி மட்டுந்தான் என்னட்டரிக்கி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்னை நேரிடையாகப் பார்க்கவொண்ணாமல் வேறெங்கோ பார்த்தவாறு தன் நெஞ்சைத் தொட்டுக்காட்டிச் சொல்கிறார். அவரது பேச்சு, இறுகிப்போனதொரு மனோராஜ்யத்தை எனக்கு நினைவூட்டுகிறது.

தூண்களில் எஞ்சியிருக்கும் செப்பேடுகளையாவது நினைவுக்கு எடுத்துச் செல்ல வற்புறுத்துகிறார். எந்த நினைவுகளையும் இனி என் இதயத்தில் சுமப்பதற்கல்ல என்கிற எனது பிடிவாதத்தை அவருக்கு நானெப்படிச் சொல்ல. பெயருக்கு ஆமென்று மட்டும் சொல்லி வைக்கிறேன்.

என்னிடமிருந்து எதையுமே பெறமறுத்த அவரிடமிருந்து விடைகேட்கிறேன். என்னை இறுகக் கட்டியணைத்து விடைதருகிறார். ஒரு தந்தையின் நீண்டநாட்களின் பின்னரானதோர் அரவணைப்பை அதிலுணர்கிறேன்.

என்னைத் தீண்டிய அந்த ஸ்பரிசம், இன்னும் நான் ஒன்றை மட்டும் இழக்கவில்லை என்கிற திருப்தியை எனக்குத் தருகிறது. பிரிகிறேன்; மரத்தினடியில் தத்துவ தரிசனம் பெற்றவனைப் போல்.

எல்லாமே எனக்குள் ஒரு நீண்ட கனவு போல். அனேகமாக இதுவே எங்கள் இறுதிச் சந்திப்பாயுமிருக்கலாம்.

தூரத்தில் நின்று திரும்பிப் பார்க்கின்றேன். இன்னமும் கையசைத்தவாறு அவர். ஒரு துளி சலனத்தினுள்ளும் தோற்றுவிடாத கவனத்துடன் நான். உலகமோ பற்றற்று நிஷ்காம்யமாக இயங்கிக்கொண்டிருப்பதாகத்தான் எனக்குப் படுகிறது.

## கடுகுக் கதை 14

# சுரண்டல்

சங்கரன்பிள்ளை தூசு தட்டி வீட்டைச் சுத்தம் செய்துகொண்டிருந்தார். இன்னும் ஒரு வாரத்தில் சித்திரைப் புத்தாண்டு. மனைவியும் பிள்ளைகளும் சங்கரன்பிள்ளைக்கு உதவி செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பழைய இரும்பு அலுமாரிக்கு மேல் இறைந்து கிடந்த சாமான்களை அப்புறப்படுத்துவதில் இளைய மகன் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பெரிய கடதாசிப் பையொன்று கவிழ்ந்து வீழ்ந்து வீடெல்லாம் 'சுரண்டல் டிக்கட்டுகள்' சிதறி வீழ்ந்தன.

"அம்மாடியோவ்! எவ்வளவு டிக்கட்டுகள்" என்று மகன் கூவினான்.

"இவ்வளவும் அப்பா வாங்கினது..." அம்மா சொன்னாள்.

"எவ்வளவு காசு செலவழிஞ்சிருக்கும்..?" மகன் கேட்டான். அம்மா பழைய டயறி ஒன்றை எடுத்துப் புரட்டினாள்.

"எண்பத்தையாயிரம் ரூபாவுக்கு அப்பா டிக்கட் வாங்கியிருக்கார்" அம்மா சொன்னாள். சங்கரன்பிள்ளை கணக்கு எழுதி வைத்துள்ளார்.

"எவ்வளவு பரிசு விழுந்தது..?" - மகன்.



"பத்தும் நூறுமாக ஆயிரத்து எண்ணூறு ரூபாக்கு பரிசு விழுந்திருக்கு" - அம்மா.

"எண்ட கடவுளே! இது என்ன அநியாயம்..? எண்பதாயிரத்துக்கு ஆயிரத்து எண்ணூறுதானா...? அப்பா டிக்கட்ட சுரண்டல்ல; டிக்கட்தான் அப்பாவ சுரண்டியிருக்கு" என்றான் மகன்.


சங்கரன்பிள்ளை முகட்டுவளையில் இருந்த தூசியை வேகமாகத் தட்டத் தொடங்கினார்.

– பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' இயேசு சபைத் துறவி அருள்பணி கலாநிதி H.J மில்லர் அடிகளாரைச் சந்தித்தோம். ஒதுக்கித் தந்த நேரத்தில் அவர் தனது அறையில் எமக்காகக் காத்திருந்தார். புனித மிக்கேல் கல்லூரியின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள அவரது அறையில் எம் சந்திப்பு இடம்பெற்றது. பளபளப்பான தரை, அழகிய வர்ணப் பூச்சுகள் கொண்ட சுவர்கள், உயர்தர மரத்தளபாடங்கள், விலையுயர்ந்த தொலைக்காட்சிப் பெட்டி, நவீன இலத்திரனியல் சாதனங்களென்று எதுவுமின்றி மிக மிக எளிமையாக அவரது அறை காணப்பட்டது. பழைய மேசையொன்று, வயதுபோன நாற்காலிகள் நான்கு (சில கதிரைகள் உடைந்து பலகைத் துண்டுகளால் சட்டம் வைத்து அடிக்கப்பட்டிருந்தன), பெரிய மரப் பெட்டியொன்று கிடையாக சரித்து வைக்கப்பட்டு அதன் மூடி திறக்கப்பட்டிருந்தது. மூடிக்கு நிலத்திலிருந்து கம்பொன்றால் முட்டுக் கொடுக்கப்பட்டிருந்தது. பெட்டிக்குள் பழைய காலத்துக் கணினியும் திறந்திருந்த மூடியில் விசைப்பலகையும் வைக்கப்பட்டிருந்தன. மேலே யிருந்த பழைய மின்விசிறி 'கிறீச் கிறீச்' என சத்தமிட்டுச் சுற்றிக்கொண்டிருந்தது.

அருள்தந்தையவர்கள் பக்கவாட்டில் தையல் பிரிந்த 'சேட்' ஒன்று அணிந்திருந்தார். துறவி என்பதன் இலக்கணமாக அவர் காட்சியளித்தார்.

**✤ வணக்கம் அருள்தந்தையவர்களே!**

☀ வணக்கம்! வாருங்கள் (புன்னகைக்கிறார்)

**✤ உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தார் பற்றியும் சற்றுக் கூறமுடியுமா?**

☀ நான் அமெரிக்காவிலுள்ள 'நியூ ஓர்லியன்ஸ்' (New Orleans) என்னும் இடத்தில் பிறந்தேன். 1925ம் ஆண்டு பிறந்த எனக்கு ஆறு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தார்கள். இப்போது சகோதரி மட்டுமே உயிரோடு உள்ளார். எனது தகப்பனார் நிதி நிறுவனம் ஒன்றில் பணி புரிந்தார்.

**✤ நீங்கள் ஏன் இயேசு சபையில் இணையச் சித்தமானீர்கள்?**

☀ நான் படித்தது எல்லாம் இயேசு சபையினருக்குச் சொந்தமான கல்லூரியில். எவ்வாறு அருள்பணி யோசப் மேரி சுவாமிகள் புனித மிக்கேல் கல்லூரியில் கற்று இயேசு சபையினர் பால் நாட்டம் கொண்டாரோ அவ்வாறுதான் நானும் கவரப்பட்டு இயேசு சபையில் இணைந்துகொண்டேன். 1941ம் ஆண்டு எனது பதினாறாவது வயதில் அவர்களிடம் சேர்ந்தேன்.

**✤ நீங்கள் இலங்கைக்கு வந்தது பற்றி...**

☀ இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் 1948ம் ஆண்டு பணியாற்றுவதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டேன். நான் வரும்போது குருவாகத் திருநிலைப்படுத்தப் படவில்லை. பின்னர்தான் குருவானேன். இலங்கைக்கு வந்தபின்னர் திருகோணமலை - மட்டக்களப்புப் பகுதிகளில் பணியாற்றினேன். ஆரம்பகாலத்தில் இயேசு சபையினர் அப்பகுதிகளில் மட்டும்தான் பணியாற்றினர்.

**✤ மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் உங்கள் பணி வாழ்வு பற்றிச் சற்றுக் கூற முடியுமா?**

☀ நான் விஞ்ஞானமாணிப் பட்டதாரியாகையால் பௌதிகவியல், ஆங்கிலம், சரித்திரம் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். மிகவும் சந்தோசத்துடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றினேன். 1959ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டுவரை இக்கல்லூரியின் பிரதான நிர்வாகியாகப் பணி புரிந்தேன். அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின் நாம் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விடுபடவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**✽ ஏன் இக்கல்லூரியையும் ஏனைய சில கல்லூரிகளையும் அரசிடம் ஒப்படைத்தீர்கள்?**

☀ அன்றைய சில சட்டங்கள், சூழ்நிலைகள் என்பன அவ்வாறு அமைந்துவிட்டன.

**✽ பங்குப் பணித்தளங்களிலும் கடமையாற்றியுள்ளீர்களா?**

☀ ஆமாம்! ஆமாம்! தாளங்குடா, கல்லாறு, வாகரை, நாவற்குடா போன்ற இடங்களில் பங்குத் தந்தையாக இருந்துள்ளேன்.

**✽ நீங்கள் ஆற்றிய வேறு பணிகள் ஏதேனும் உண்டா?**

☀ 1990களில் பிரஜைகள் குழு என்ற அமைப் பொன்று இருந்தது. அதில் பணியாற்றினேன். அது மட்டக்களப்பைப் பொறுத்தவரை பயங்கரமான காலம். கைது செய்யப்படுவதும் காணாமல் போவதும் சர்வ சாதாரணம். (இது பற்றி திரு.ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந் திரம் அவர்கள் ஒரு முறை குறிப்பிடுகையில், வணபிதா. மில்லர் (இயேசு சபை) முறையிடப்பட்ட காணமல் போனோர் பட்டியலில் தான் மட்டும் உயிரோடு மீண்டதாக அவர் தன்னிடம் கூறியதாகச் சொன்னார்) 1979ம் ஆண்டு காலப்பகுதியில் 'ரோட்டரி கழக' தலைவராகப் பணியாற்றியுள்ளேன். 1999ம் ஆண்டுகளில் சமாதானக் குழுவில் இணைந்து சேவையாற்றினேன்.

**✽ இலங்கையில் சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் தங்களின் பங்கு என்னவாக இருந்தது?**

☀ அக்காலகட்டத்தில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் கண்காணிப்புக் குழு (SLMM) ஒன்று இருந்தது. அதில் அரசாங்கத்தின் சார்பாக இருவரும் மற்றைய அணி சார்பாக இருவரும் அங்கம் வகிப்பர். நான் அரசாங்கம் சார்பான அணியின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டேன். முறைப்பாடுகளின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதே எம் பணி.

**✽ உங்கள் கலாநிதிப் பட்டம் பற்றி...**

☀ எண்பதுகளில், கிழக்குப் பல்கலைக்கழகத் தால் எனக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

**✽ நீங்கள் உங்கள் சொந்த நாடு செல்வதாகக் கேள்விப் பட்டோமே!**

☀ நான் நீண்ட விடுமுறையில் எனது பிறந்த இடத்திற்குச் செல்கின்றேன். சிலவேளைகளில் அங்குள்ள இயேசு சபையினருடன் இணைந்து பணியாற்றவும் வாய்ப்புக் கிடைக்கலாம்.

*அருள்பணி கலாநிதி H.J.மில்லர் (ஜே.ச) அடிகளாரைப் பற்றி அருள்பணி போல் சற்குண நாயகம் (ஜே.ச) அடிகளார் குறிப்பிடுகையில் 'நான் நான்காம் வகுப்புப் படிக்கையில் மில்லர் அடிகளார் மட்டக்களப்பிற்கு வந்தார். அப்போது அவர் குருவாக இல்லை. பின்னர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். சிறந்த நிர்வாகி. குறிப்பாக நிதித் துறையில் சிறப் பான நிர்வாகியாக இருந்தவர். பங்குகளில் பணி யாற்றியுள்ளார். கல்குடாவில் உள்ள பாரிய தென்னந் தோட்டத்தின் முகாமையாளராகச் செயற்பட்டவர். கிழக்குத் தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். தமிழ் மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டவர்' என்றார்.*

*நமது செவ்வியின்போது இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாகக் கேட்டபோது, தமிழரசுக் கட்சியின் ஆரம்பம், அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடக்கம் இன்றுவரையுள்ள பிரச்சினை களையும் சரித்திரங்களையும் அப்படியே விலாவாரி யாகச்சொல்லி எம்மைப் பிரமிக்க வைத்தார். "யுத்தம் முடிவுக்கு வந்து ஒரு சாரார் அழிக்கப்படலாம். ஆனால் இது முடிவேயன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வல்ல" என்ற கருத்தில் அவர் உறுதியாக இருந்தார். இருதரப்பினரும் இதய சுத்தியுடன் இருந் தால் மட்டுமே தீர்வு நிச்சயம் என்பது அவர் அபிப் பிராயம்.*

*நாம் அவரைச் செவ்வி காண்பதற்கு முன் தினம் அமெரிக்கத் தேசிய தொலைக்காட்சி, 'நியூ யோர்க் டைம்ஸ்' என்பன அவரைப் பேட்டி கண்டு சென்றிருந்தன.*

*இலங்கையின் தமிழ் மக்களின் பிரச்சினை களை வெளியுலகு அறியச் செய்யும் ஊடகமாகவும் அவர் இருந்தார்.*

*அவருக்குத் தொண்டனின் சார்பில் நன்றியும் வாழ்த்துகளும் கூறி விடைபெற்றுக்கொண்டோம்.*

**- ஆழியோன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உணர்வு தரும் உயிர்ப்பு

விண்ணிலும் மண்ணிலும் தாரை ஒலிக்க
வியப்புடன் மாந்தரும் கூவிக் களிக்க
மண்ணக மீட்பனும் உயிர்த்து விட்டான்...
மறை உண்மையை அவனே உணர்த்தி விட்டான்!
(விண்ணிலும் மண்ணிலும்...)

பாரச் சிலுவை அன்று பரமன் தோளில் அம்மா - அந்தப்
பாவியர் முள்முடி தேவனின் சிரசில் அம்மா....!
தூரம், தூரமாய்த் துய்யன் தளர்நடை பயின்றானம்மா - திருமுகத்தில்
துப்பியே ஏளனம் புரிந்தார் அம்மா! அம்மா!

என் தேவனே என்னை ஏனோ கைவிட்டீர் - என்றே
ஏசுவும் ஏங்கியே தவித்தார் அம்மா...!
இவர்கள் செய்வது ஏதென்று அறியாராம் - நீர் நன்றே
இதயத்தில் மன்னியும் என்றார் அம்மா...!
பொன்மேனி எங்குமே பொல்லாத கசையடிகள் - குருதி
பொங்கியே அருவியாய் ஓடிய கோலமே பாரம்மா...!
உன்பாவம் தனையேற்று ஜீவனைப் பலிதந்த - அந்த
உத்தமன் தியாகம் எண்ணிட ஒரு கணம் நீ தயாரா...?
(விண்ணிலம் மண்ணிலும்....)

விண்ணவன் திட்டமும் திண்ணமாய் நிகழ்ந்திட - எம்
விமலனின் கல்லறை திறந்த விந்தை பாரம்மா...
மண்ணிலே பொல்லா மரணத்தை வென்றுவிட்ட - எம்
மன்னவன் புதிய சரித்திரம் படைத்தாரம்மா...!
மண்ணகம் இகழ்ந்திடும் மகதலேனாள் என்றிடும் மாது - திரு
மைந்தனின் உயிர்ப்பிற்கு முதற்சாட்சி ஆனாளம்மா!
புண்ணிலே விரல் நுழைத்ததன் பின்பே சீடனும் - அந்நாள்
புதுமையின் திறத்தினை நம்பினன் அம்மா!

இன்றும் எம்மாந்தர் சுமந்திடும் சிலுவைகள் எண்ணில - அவை
இற்று வீழ்ந்திட, விடுதலை பெற்று உயர்ந்திட வேண்டுமம்மா!
பொன்னிலும், பொருளிலும், உலக போகம் என்றிடும் ஆழியிலும் - மூழ்கியே
பொறுமையும் மன்னிப்பும் இறைவாழ்வின் மேன்மையும் இழந்திடுவார் - மனம்
துன்னிருள் செறிந்திட பாவச் சேற்றினில் அழுந்தியே தத்துவம் பலவாய் ஓதுவார் - அவர்
துய்யன் ஏசுவின் உயிர்ப்பையும் எள்ளியே நகையாடுவார் - நம்
மன்னன் மறைமொழி மாமருந்தென்றிடும் உண்மை ஓர்ந்தே - அவன்
மலர்த்திடும் புதிய உலகினில் இடம்பெற இதயம் கழுவியே
உயிர்ப்பினைப் பகர்வோம் வாரீர்

- முனைப்பூர் சசீந்திரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாய் திறந்த கல்லறை

கல்லறைகள் தம்மிடம் வந்து சேர்பவற்றை என்றுமே திருப்பி அனுப்புவதில்லை. கல்லறையின் மூடிய வாயில்கள் திறப்பதுவும் இல்லை. முடிந்த கதைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி கல்லறைதான். கல்லறைகூட இயேசுவின் உடலையும் உயிரையும் மூன்று நாட்களுக்குப் பாதுகாத்து, அவர் சொல்லுக்கு வாய் திறந்தது. உலகில் பிறந்த எந்த மனிதனும் தன் மரண நேரத்தை முன்னரே தெரிவித்தது கிடையாது. மரணத்தின் நிழல் எப்போது நம்மைத் தீண்டும் என்பதையும் எவரும் அறிந்ததே இல்லை. ஆனால், ஆண்டவர் இயேசு தாம் அனுபவிக்கப்போகும் பாடுகளையும் மரணத்தையும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுதல் பற்றியும் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

ஆம்! கிறீஸ்து, கல்லறை வாய் திறந்து எழுந்திராவிட்டால் கிறீஸ்தவ மார்க்கத்தின் விசுவாசம் என்னவாக இருந்திருக்கும்? அந்த உயிர்ப்பு ஒவ்வொரு பாவியின் வாழ்விலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்ற உண்மையை எவராலும் மறுக்கவே முடியாது. ஆயினும் இந்த உயிர்த்தெழுதலை மறுப்போரும் அவரின் வாழ்க்கையை ஏளனமாக பலவாறு விமர்சனம் செய்வோரும் இருக்கவே செய்கின்றனர். எது எப்படி இருந்தபோதிலும் கிறீஸ்துவில் நமது விசுவாசம் உறுதியாக இருப்பது அவசியம். உண்மைக்கு விரோதமானவைகளை நாம் அறிந்துகொள்வது நமது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதோடு ஆழப்படுத்தவும் ஏதுவாக அமையும்.

கிறீஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான ஆதாரம் வெறுமையாக இருந்த கல்லறையே. இயேசு மரிக்கவில்லை. மயக்கநிலையில் அடக்கம் செய்யப்பட்டு மயக்கம் தெளிந்ததும் கல்லைப் புரட்டித்தான் உயிர்த்தெழுந்ததாக சீடருக்குக் காண்பித்தார் என்ற கதைகளையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இயேசு சிலுவையில் மரித்தார் என்பதற்கான ஆதாரங்கள் திருமறையிலும் வரலாற்றுக் குறிப்புகளிலும் காணப்படுகின்றது. சிலுவை மரணத்திற்கும் மயக்கத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் போர்வீரர்கள் அறியாதவரல்ல. குறிப்பிட்ட நேரத்தில் சிலுவையில் அறையப்பட்டவர் மரணமடையாவிட்டால் அவர் முழங்கால் எலும்புகளை முறிப்பது வழக்கமாக இருந்தது. இயேசு உண்மையில் மரித்தார் என்பதை போர் வீரர்கள் உணர்ந்து கொண்டதனால் அவரது எலும்புகள் முறிக்கப்படவில்லை (யோவான் 19:32,33). போர்ச் சேவகன் அவர் விலாவை ஈட்டியால் குற்றித் திறக்கவே இரத்தமும் தண்ணீரும் வெளிவந்தது. இதற்கு அவனே சாட்சி பகர்ந்தான் (யோவான் 19:34,35).

இயேசு மரித்து உயிர்த்தெழுந்தார். அதனால் கல்லறை வெறுமையாக இருந்தது (யோவான் 19:30). அரிமத்தியு ஊரானான யோசேப்புக்குச் சொந்தமான நிலத்திலுள்ள கல்லறையிலேயே அவரது சரீரம் வைக்கப்பட்டிருந்தது (மத் 27:60). மார்த்தாளும் மரியாளும் கல்லறைக்கு அதிகாலையில் சென்றபோதும் பின்னர் பேதுருவும் யோவானும் அங்கு சென்ற போதும் கூட கல்லறை திறந்தே இருந்தது. இயேசுவின் உடலை சீடர்கள் திருடியிருப்பார்கள் என்ற கூற்றும் நம்பக்கூடியதாக இல்லை. அரிமத்தியு யோசேப்பு பிலாத்துவின் அனுமதியுடன் தன் சொந்தக் கல்லறையிலே அடக்கம் செய்தான். அடக்கம் பண்ணியவனே களவெடுக்க முடியாதல்லவா. இயேசுவின் உடலை எவரும் களவாடக்கூடாதென்பதற்காகப் பிலாத்து காவலாளிகளை நியமித்தான். அத்தனை பேரையும் மீறி உடலைக் களவாடிச் செல்வது முடியாத காரியம் (மத் 27:25). மேலும் காவலாளிகளே பிரதான ஆசாரியர்களிடம் கிறீஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதைக் கூறியுள்ளனர் (மத் 28:11). மேலும் இக்காவலாளிகள் இயேசுவின் உயிர்ப்பைக் கண்ணாரக் கண்டவர்களாவர் (மத் 28:04).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மிகப் பழைய காலத்திலிருந்து சீடர்கள் அவர் உடலைக் களவாடிச் சென்றதாக ஓர் ஐதீகமும் உண்டு (மத் 27:62-66). சீடர்கள் அவர் உடலைக் களவாடிவிடக்கூடாது என்பதற்காகவும் அவர் உயிர்த்தெழுந்தார் என மக்களுக்கு அறிவிக்காதபடியும் பிலாத்து கல்லறைக்குக் காவல் போட்டான். யூத பாரம்பரியச் சரித்திரக் குறிப்புகள் 120 பேரைக் காவலுக்கு நியமித்ததாகக் குறிப்பிடுகின்றன. இத்தனை பேரையும் மீறி சரீரத்தைக் களவாடுவது என்பது எளிதான காரியமல்ல. பரிசேயரும் சதுசேயரும் ஆண்டவரின் உயிர்ப்பை மறைக்க எண்ணிப் போர்வீரர்களுக்குப் பணம் கொடுத்து, தூங்கிக்கொண்டிருந்தபோது களவாடப்பட்டதாக சொல்லும்படி செய்தனர் (மத் 28:13). இப்பேச்சு யூதரிடையே பிரசித்தமாய் இருந்தது. (மத் 28:15) கல்லறை மூடிகள் அகற்றப்படும் சத்தம் கேட்டுத் தூங்கிக்கொண்டிருக்க முடியுமா? உரோமவீரர்கள் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது தூங்கினால் அவர்களுக்கு விதிக்கப்படுவது மரண தண்டனையே ஆகும். இயேசு கைது செய்யப்படடபோது ஓடி ஒழித்த, மறுதலித்த சீடர்களுக்கு உரோமைப் பேரரசின் விதிகளை மீறி சரீரத்தைக் களவாடும் தைரியம் எப்படி வரும்? இயேசு உயிர்த்ததைக் கண்டவர்கள் உண்மையை உண்மையாகவே கூறினர். அப்போஸ்தலர்கள் அவரைக் கண்டது மட்டுமல்ல அவரோடு உரையாடினார்கள். அவர் தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்; உணவும் உண்டார். தோமாவும் விலாவில் தம் கையை விட்டுப் பார்த்துச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்டார். கல்லறைக்குச் சென்ற பெண்கள் தேவதூதர் மூலம் உயிர்த்த செய்தியறிந்து சீடரிடம் தெரிவிக்கச் சென்றபோது இயேசுவைக் கண்டனர், (மத் 28:1-10, யோவான் 20:01) மரிய மகதலேனாவும் இயேசுவைக் கண்டாள். பேதுருவுக்கும் இயேசு தன்னைக் காட்டினார். எம்மாவுக்குச் சென்ற சீடரும் கண்டனர் (லூக் 24:13-35). பத்துச் சீடரும் ஒன்றாக இருக்கும்போது உயிர்த்த இயேசுவைக் கண்டனர் (யோவான் 20:19-23). பதினொரு சீடர்களும் கலிலேயாக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது இயேசுவைக் கண்டனர் (யோவான் 21:01-23).

ஒரே நேரத்தில் ஐநூறு பேர்கள் அவரைக் கண்டனர். இயேசு பரலோகத்திற்குச் செல்வதை



அப்போஸ்தலர்கள் கண்டனர் (லூக் 24:50-52). ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்குச் சாட்சிகள் இவர்களே. கல்லறையில் அவரைப் பொதிந்த துணிகள் ஒழுங்கான நிலையில் வைக்கப்பட்டிருந்தது. தலையைச் சுற்றியிருந்த துணி மற்றத் துணிகளுடன் வைக்கப்படாமல் தனியாக வைக்கப்பட்டிருந்தது.

கல்லறையின் கல் அகற்றப்பட்டு அதன்மீது பொறிக்கப்பட்ட முத்திரை உடைக்கப்பட்டிருந்ததும் ஆதாரமாகும். அவரின் உயிர்ப்பினால் நாம் இரட்சிக்கப்பட்டோம் (எபே 2:7). கிறீஸ்து உயிர்த்தெழாவிட்டால் நாம் இன்னும் பாவ இருளில் இருப்போம் (1 கொரி 15:17). வாழ்வது நாமல்ல கிறீஸ்துவே நம்மில் வாழ்கிறார் (கலா 2:20). கல்லறையை விட்டெழுந்த இயேசு இன்னும் சீவிக்கிறார்.

நாம் வாழ்க்கைப் பாதையில் மரணத்தை நோக்கி ஒவ்வொரு அடியாக முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். எனவே நம் கண் முன் கல்வாரிப் பாடுகளை நிறுத்தி, தியானித்து உயிர்ப்பின் மகிமையில் நம் விசுவாசத்தை ஆளப்படுத்தி கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவைப் பலப்படுத்தி மோட்சபாதையை நோக்கித் தயாராவோம்.

**- றெ. சிதம்பரி -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இலக்கிய வெளிப்பாடுகளில் நாடகத்தின் இடத்தை இன்றைய சினிமாத் துறை பிடித்துவிட்டது. முன்பெல்லாம் விடிய விடிய விழித்திருந்து கூத்துகள் பார்த்ததுண்டு. அவித்த கடலையும் வறுத்த கச்சானும் கொறித்துக்கொண்டே கூத்துகளை இரசித்ததுண்டு. இன்றைய இளசுகளுக்கு கூத்தென்றால் என்னவென்று பெரும்பாலும் தெரியாது. மேடை நாடகங்கள் பற்றிய அனுபவம் இல்லை. 'நாடகமும் அரங்கியலும் என்னும் பாடமானது பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அதன் ஆதிக்கம் குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுந்தான். இன்று நாடகம் என்றால் தொலைக்காட்சி நாடகம் மட்டும்தான் இளைய சமுதாயத்தின் கண்முன்னே தோன்றும். எனவே, சினிமாவையும் தொலைக்காட்சி நாடகங்களையும் புறக்கணித்துவிட்டு இலக்கியம் பற்றிப் பேச இயலாது. நீண்ட நாள்களுக்குப் பிறகு நாமும் சினிமா பற்றிப் பேசவுள்ளோம்.

'அபியும் நானும்' என்னும் தமிழ்த் திரைப்படம் பற்றிப் பேசியே ஆகவேண்டும். 'மொழி' என்ற தமிழ் சினிமாவைத் தந்த அதே குழுவினர் தந்த படந்தான் 'அபியும் நானும்' ஆகும். இப்படத்தைப் பார்த்தபோது படமொன்றைப் பார்த்த களைப்பே இருக்கவில்லை. தெளிந்த நீரோடையில் நீரை அள்ளிக் குடித்தது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது. தகப்பன் - மகள் பாசம், தகப்பனின் அக்கறை என்பன படம் முழுவதும் இளையோடிக் கொண்டே இருக்கின்றன. மகள் பிறந்து பிஞ்சுக் குழந்தையாக இருக்கும்போது அதன் காலை முத்தமிடுவது தொடக்கம் திருமணம் செய்து கொடுக்கும் வரை தகப்பனாக வரும் 'பிரகாஷ்ராஜ்' படும் அவஸ்தைகள் ரசிக்க, சிரிக்க, பிரமிக்க வைக்கின்றன. மகள், கல்லூரிக்கு சைக்கிளில் செல்லும்போது பின்னாலே அவளுக்குத் தெரியாமல் வாகனத்தில் சென்று பார்க்கின்றார் தகப்பன். அவள் விழுந்துவிடுவாளோ என்ற பயந்தான் அதற்குக் காரணம். மகளோ "நான் செய்வது என்னவென்று எனக்குத் தெரியும்" என்று சொல்லி தகப்பனைத் திருப்பியனுப்பி விடுகின்றாள்.

பிச்சைக்காரனை வீட்டில் கொண்டுவந்து விட்டு அடம்பிடிக்கும் காட்சி இரசிக்கத்தக்கது. பிரகாஷ்ராஜ் அவர்களின் நடிப்பு இயற்கையாக அமைந்துள்ளது. வில்லன் நடிகர் கதாநாயகனாக நடிக்க முடியும் என்பதையும் அவர் அடிக்கடி நிரூபணம் செய்கின்றார். எம்.ஜி.ஆர் அவர்கள் ஒருநாளும் கெட்டவனாக, வில்லனாக நடிக்கமாட்டார். அப்படி நடிப்பதென்றால் இரட்டை வேடத்தில் ஒரு பாத்திரம் வில்லத்தன்மையுடனும் வந்து திருந்துபவராக இருக்கும். இன்றைய இளந்தலைமுறையினருக்கும் இது பொருந்தும். ஆனால், கமல்ஹாசன், விக்ரம், சூர்யா போன்றவர்கள் வித்தியாசமானவர்கள்தான்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




திரிஷா அவர்களுக்கு நடிக்கத் தெரியும் என்பதை இப்படம் காட்டித் தந்திருக்கின்றது. 'டூயட்' பாடல் காட்சி ஒன்றுகூட இல்லாமல் ஒரு படத்தை அவர்கள் தந்துள்ளார்கள். 'ஆபாசம்' என்பதேயில்லை. ஆனால், படம் முழுவதும் 'பாசம்' உண்டு.

கணிசமான பாத்திரங்களில் பாத்திரங்கள் வேற்று மொழி பேசுகின்றன. ஆனால், காட்சியமைப்பு அவர்கள் பேசுவது என்னவென்பதை ஊகிக்க வைக்கின்றது.

இயற்கைக் காட்சிகளில் எழில் கொஞ்சுகின்றது. படத்தின் ஒவ்வொரு 'பிரேமும்' கவனமாக, தொய்வில்லாமல் நகர்த்தப்படுகின்றது. மதம், மொழி என்பவற்றைக் கடந்தது காதல் என்பதனை ஆர்ப்பாட்டம் இல்லாமல் சொல்லிக் காட்டுகின்றது இப்படம். பார்த்துத்தான் இரசியுங்களேன்.

இவ்விடத்தில் இன்னொரு படத்தைப்பற்றியும் சொல்லவேண்டும். அதுதான் 'நான் கடவுள்'. தமிழ் சினிமாவில் நல்ல பிரம்மாக்கள் உள்ளனர் என்பதனை மீண்டும் நிரூபிக்கின்றது இப்படம்.

பாலச்சந்தர், பாலுமகேந்திரா, பாரதிராஜா, பாக்கியராஜா என்ற 'பா' இயக்குனர் வரிசையில் 'பாலா'வும் இடம் பிடித்துவிட்டார். முதல் அரை மணித்தியாலங்களும் என்னடா இப்படம் என்ற மனநிலை சிலருக்கு ஏற்படலாம். ஆனால், போகப் போக அபாரம்.

படத்தில் வரும் பிச்சைக்காரர்களின் வாழ்க்கை அப்படியே 'யதார்த்தம்'. எனக்குக் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதுமாணிக்கு கற்பித்த பேராசிரியர் ஒருவர் கொழும்பில் உள்ள 'தெருப் பிச்சைக்காரர் பற்றிய ஓர் ஆய்வு செய்திருந்தார். அவரின் அனுபவத்தை அப்படியே வாய் பிளக்கக் கேட்டுக்கொண்டிருப்பேன். 'ரூபவாஹினியிலும்' 'பிச்சைக்காரச் சிறுவர்' பற்றி ஒரு சிங்கள நாடகம் தொடராக வந்தது. அதை அப்படியே திரைக்குக் கொண்டுவந்துள்ளார் இயக்குனர் பாலா. 'சேது'வையும் தந்தவர் அல்லவா அவர்! ஆர்யாவைப் பாத்திரமாகவே மாற்றிவிட்டார். அவர் விருது பெறுவது நிச்சயம். இளையராஜா இசையமைத்துள்ளார். சில வட இந்தியக் காட்சிகளுக்காக 'உத்தம் சிங்' என்ற வட இந்திய இசையமைப்பாளருடன் அவர் இணைந்துள்ளார்.

இசையமைப்பாளர் என்று சொல்லும்போது திலீப்குமார் (A. R. ரஹ்மான்) பற்றியும் குறிப்பிட்டேயாக வேண்டும். மனிதர் இரண்டு 'ஒஸ்கார்' விருதுகளைத் தட்டிவிட்டாரே. பாராட்டியே ஆகவேண்டும். இன்னொரு முறை அவருக்கு விருது வாங்கித் தந்த படம் பற்றியும் பார்க்கவேண்டும். எட்டு விருதுகளைத் தட்டிச் சென்ற படமல்லவா அது.

## குறும்(புப்)பா - 15



கதிரைக்காய்க் கத்துகிறார் கோஷம்
காய்ந்துகுரல் விட்டனரோ வேஷம்
மாய்ந்துடலங் கருகியும் மனிதமிங்கு தோற்றதுகாண்
பாவமடா நம்காந்தி தேசம்!

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



அமரர்:

## திருமதி. மிக்கேல் சேர்வை அக்னஸ் சந்தனம்

48 வயதில்

**அன்னை அன்னம்மாவின் மடியில்:** 26.10.1910
**அமலன் இயேசுவின் திருப்பாதத்தில்:** 14.03.2009 (பி.ப 2.10)

**இடம்** - முதியோர் இல்லம்
திருமலை வீதி
மட்டக்களப்பு

**பராமரிப்பு** - அருட் சகோதரிகள்
(Little Sisters of the Poor)

**வயோதிப மடத்தில் வாழ்ந்த காலம்** - சுமார் 30 வருடங்கள்

**தந்தை:** மிக்கேல் சேர்வை, சிவகங்கை, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா. **அன்னை:** அன்னம்மாள். **கணவர்:** பெரிய சந்தனம் சஞ்சீவி. **சகோதரர்கள்:** 1. சந்தனம் சேர்வை 2. ஜோக்கிம் சேர்வை. **சகோதரிகள்:** 1. சந்தன மேரி, 2. சவரியம்மா, 3. செபமாலை மேரி. **பிள்ளைகள்:** 1. ஜோன் சந்தனம், 2. ராயர் சந்தனம், 3. மத்தியூ சந்தனம், 4. புஸ்பநாதன் சந்தனம்

**நல்லடக்கம்** - 15.03.2009
கள்ளியன்காடு, உயிர்ப்பின் உறைவிடம்

**இவர் மிக அபார ஞாபக சக்தியும், தம் சமயத்தில் விசுவாசமும் கொண்டவர். விவிலியக் கதைகள், இராமாயணம், இதிகாசம் போன்ற பல்கதைகளைக் கற்றவர்**

**அன்னாரின் மறைவு கேட்டு ஈமச் சடங்குகளில் கலந்துகொண்ட துணை ஆயர், குருக்கள், துறவிகள், ஆசிரியர்கள், நண்பர்கள், மற்றும் பரோபகாரிகளுக்கும் புனித மரியாள் விடுதி மாணவர்கள், சிறிய புஷ்பம் மகளிர் இல்ல மாணவிகள், கத்தோலிக்க அச்சகப் பணியாளர்கள், கார்மேல் பற்றிமாக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்முனை மக்கள், மட்டக்களப்பு மக்கள் அனைவருக்கும் நன்றிகள்**

**விசேடமாக 30 ஆண்டுகளாக இவரைப் பராமரித்த ஏழைகளின் சிறிய சகோதரிகளின் அன்பு உள்ளங்கள் என்றுமே நினைவுகூரத் தக்கவை.**

**கடந்த 30 ஆண்டு காலத்தில் இவரைச் சென்று பார்த்து அன்பு பாராட்டிய அனைத்து அன்பர்களுக்கும்**

**நன்றிகள்.**

மகன்
சகோதரர் S.A.I. மத்தியூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media








## விவிலியம் கற்போம் - 73 விடைகள்

நெருப்பு, தபேரா, இறைச்சி, மன்னாவை, உரலில், கூடாடி,
பெரும்பளு, ஆவியில், புறக்கணித்து, மேதாது

## அறிவை வளர்ப்போம் - 73 விடைகள்

1) கம்பராமாயணம் 2) கண் இமை 3) சீனா
4) ஒரு தேர்தல் முறை 5) ஓநாய் 6) சொல்லிசை அளபெடை

## பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ்

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- அஸ்லினா எல்டன்
  திருகோணமலை
- பேபியன் அன்ரனி பாத்லட்
  மட்டக்களப்பு

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 25 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  மெசலின் றாகல்
  பனிச்சையடி
  மட்டக்களப்பு
- **இரண்டாம் பரிசு** - 200/=
  பிரதீஷ்லூக் தீஷா
  திருகோணமலை
- **3ம் பரிசு** - 100/=
  V. பிரியங்கா
  திருக்குடும்பக்
  கன்னியர் மடம்
  தாண்டவன்வெளி
  மட்டக்களப்பு

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
31- 05 - 2009

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 75

(எண்ணிக்கை 14:1–25)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மக்கள் கூட்டமைப்பு முழுதும் உரத்தக் குரலில் புலம்பிற்று; மக்கள் அன்றிரவு அழுது கொண்டே இருந்தனர். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர்; ........................ கூட்டமைப்பிலுள்ள அனைவரும் அவர்களிடம், "எகிப்து நாட்டில் நாங்கள் இறந்திருந்தால் எவ்வளவோ நலம்! இந்தப் பாலை நிலத்தில் மடிந்தால் அதுவும் நலமே! ............................................ இரையாகும்படியா ஆண்டவர் எங்களை இந்த நாட்டுக்கு அழைத்து வந்திருக்கிறார்? எங்கள் மனைவியரும் குழந்தைகளும் மடியப்போகிறார்கள்! நாம் .............................. நாட்டுக்குத் திரும்பிச் செல்வது நலமன்றோ?" என்றனர். மேலும் அவர்கள் ஒருவர் மற்றவரை நோக்கி, "நாம் ஒரு தலைவனை நியமித்துக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிச் செல்வோம்" என்றனர். உடனே மோசேயும் ஆரோனும் .................................... மக்கள் கூட்டமைப்பின் முழுவதற்கும் முன்பாக முகங்குப்புற விழுந்தனர். மேலும் நாட்டை உளவு பார்த்து வந்தவர்களிடையே இருந்த நூன் மகன் யோசுவாவும் எப்புன்னே மகன் காலேபும் தங்கள் உடைகளைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரயேலர் .................................... உள்ள அனைவரிடமும் கூறியது: "உளவு பார்க்கும்படி நாங்கள் கடந்து சென்ற நாடு மிகச் சிறந்த நாடு. ஆண்டவருக்கு நம்மேல் நல்விருப்பு ஏற்பட்டால் ................................. வழிந்தோடும் இந்த நாட்டினுள் அவர் நம்மை அழைத்துச் சென்று அதை நமக்குத் தருவார். எனவே அஞ்சவேண்டாம்" ஆனால் அவர்களைக் கல்லால் எறியும்படி மக்கள் கூறினர். உடனே ஆண்டவரின் மாட்சி சந்திப்புக் கூடாரத்தில் தோன்றியது. .......................... மோசேயிடம், "அவர்களைப் புறக்கணித்து உன்னைப் பெரிய வலிய இனமாக்குவேன்" என்றார். மோசே "எகிப்தியர் இதுபற்றிக் கேள்விப்பட்டிருப்பர். நீர் நேர் முகமாய்க் காணப்படுகிறீர்; இப்போது நீர் இம்மக்களைக் கொன்றால், இனத்தவரெல்லாம், ........................... கொண்டுவர இயலாததால் பாலைநிலத்தில் கொன்றுவிட்டார் என்பார்களே! உம்மை மன்றாடிக் கேட்கிறேன்" என்றார். ஆண்டவர், "உன் வாக்கின்படி நான் மன்னித்துவிட்டேன்; ஆயினும் என் .................................. மேல் ஆணை! என் குரலுக்குச் செவிகொடுக்காததால், இவர்கள் மூதாதையருக்குத் தருவதாக வாக்களித்த நாட்டை ஒருவன்கூடப் பார்க்க மாட்டான். ஆனால், என் அடியான் .................................. என்னை முழுமையாகப் பின்பற்றினான். அவனைக் கொண்டு வருவேன். எனவே நாளைக்குச் செங்கடலுக்குப் போகும் வழியே பாலைநிலத்துக்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்றார்.

**விடைகள் : கூட்டமைப்பில், பாலும் தேனும், ஆண்டவர், வாக்களித்த, காலேபு, உயிர், வாளுக்கு, இஸ்ரயேல், எகிப்து, மக்கள்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 75

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. ஆசியாவில் மட்டுமே பயிராகும் மரம்
(சந்தனமரம், வேலமரம், ஆலமரம்)

2. நவீன ஓவியத்தின் தந்தை
(ரவிவர்மா, பிக்காசோ, மைக்கல் ஆஞ்சலோ)

3. நமது இதயத்தில் உள்ள அறைகள்
(நான்கு, இரண்டு, ஒன்று)

4. நான்கு வேதங்களில் ஒன்று
(பைபிள், பகவத்கீதை, இருக்கு)

5. 'பாதரட்சை' என்பதன் தமிழ்ச் சொல்
(சப்பாத்து, பாதுகை, காலணி)

6. 'வஞ்சி வந்தனளே' என்பது
(உவமையாகுபெயர், பண்பாகுபெயர், முதலாகுபெயர்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 75
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka. No: 187317

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

# ஏப்ரல், மே – 2009

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.50 மணி**

நாள்: 25, 26, 27, 28 – ஜெயரஞ்சி வாஸ்
29, 30, 01 – மெற்றில்டா இராஜேந்திரம்
09, 10, 11, 12 – முத்தையா செல்வராணி
13, 14, 15 – வயலற் சந்திரசேகரம்

**சிறுவர் உலகம் – மாலை 5.15 மணி**

நாள்:- ஏப்ரல் 21, மே 05

கதையும் கருத்தும், கவிதை, குறுங்கதை, கட்டுரை,
பாடல்கள் இன்னும்...

**புதிய உலகம் – மாலை 4.30 மணி**

நாள்:- ஏப்ரல் 19, மே 03, மே 17


வழிபாடு, திருச்சபைச் செய்திகள், நாடகம், சிந்தனை உரை,
பாடல்கள் இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு :
மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media